SAMARASAM
# சமரசம்
மாதம் இருமுறை இதழ்
1-15 ஆகஸ்ட் 2026
₹25
Volume : 47 Issue : 04
www.samarasam.net

இந்தியாவில் பொது சிவில் சட்டம் ஏன் நடைமுறைக்கு ஏற்றதல்ல?

நீதியின் குரல் வெல்லட்டும்




## ஒழுக்க விழிப்பு உணர்வு காலத்தின் கட்டாயம்

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் பத்திரிகையாளர் சந்திப்பு

# வேலூர் புரட்சி 1806



விடுதலை தின சிறப்புக் கட்டுரை



## இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு

- H. அப்துர் ரகீப்

TRADITIONAL TRUST SINCE 1925
LKS
100 YEARS

**அல்லாஹ் உங்கள் உருவங்களையோ, செல்வங்களையோ பார்ப்பதில்லை. ஆனால் அவன் உங்கள் இதயங்களையும் செயல்களையும் பார்க்கின்றான்.**

– முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்


கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை – 600 086.
போன் : (044) 2811 3611

## உள்ளே...




● H. அப்துர் ரகீப்

10 இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு

● கடிதங்கள் ● திருக்குர்ஆன் விரிவுரை ● நபிமொழி விளக்கம் ● புதிர் போட்டி

8 நீதியின் குரல் வெல்லட்டும் ● தலையங்கம்

15 நல்லறங்கள் எத்தகையதாய் இருக்க வேண்டும்?
● சையத் சஆதத்துல்லாஹ் ஹுஸைனி

18 வேலூர் புரட்சி 1806 ● சேயன் இப்ராகிம்

22 ஒழுக்க விழிப்பு உணர்வு காலத்தின் கட்டாயம்!
● மௌலவி முஹம்மத் ஹனீஃபா மன்பயீ

29 இந்தியாவில் பொது சிவில் சட்டம் ஏன் நடைமுறைக்கு ஏற்றதல்ல?
● டாக்டர் மசிஹுர் ரஹ்மான்

34 முராக்கபா – இறைவனின் கண்காணிப்பை உணரும் விழிப்பு உணர்வு
● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

36 கோபம் தவிர்! ● பானு ஹமீத்

40 சிறுகதை : மெரினா மஹால் ● முஹம்மது ரில்வான்

43 **திருக்குர்ஆனும் அறிவியல் அற்புதங்களும்**
கருவியல் ஆராய்ச்சியின் அதிசயம் ● A.S. முஹம்மது ரசான்

45 நாவல் : அக்கரைப் பச்சை ● ஜரினா ஜமால்

48 சிறார் உலகம் : கண்மணியே கண்ணுறங்கு! ● கவிஞர் காசீம்

50 உங்கள் பிள்ளைகளோடு பேசத் தயங்குவது ஏன்? ● TAL

ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*
**samarasam.article@gmail.com**

*சந்தா - விநியோகப் பிரிவு விளம்பரத் தொடர்புக்கு :*
**M. அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*
**samarasam.advt@gmail.com**

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

Creative Communication Chennai
SCAN & PAY
UPI ID: creative3142@sbi

சமரசம் சந்தாக்கள்,
விளம்பரக் கட்டணங்களை அனுப்ப
QR Codeஐ Scan செய்யவும்

பொறுப்பாசிரியர், சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## ● உண்மையை உலகறியச் செய்த கட்டுரை

இனி ஒரு போபால் வேண்டாம் தலையங்கம் மிக அருமை. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அரசு அதிகாரிகள், தங்கள் சுய லாபங்களுக்காக சமரசப் போக்கைக் கடைப்பிடிக்கும் மனோபாவத்தை மாற்றிக் கொள்ளாத வரையில் இது போன்ற விபத்துகளும், மனித உயிர்கள் பலியாவதும் தொடரவே செய்யும். நேர்மையற்ற அதிகாரிகள் மீது அரசின் சாட்டையடி விழுந்தால் மட்டுமே தொழிற்சாலைகளில் அப்பாவிகளின் உயிர்கள் பறிபோவதைத் தடுக்க முடியும்.

ஜவஹர்லால் நேரு நியமன பிரதமராக இருந்த காலகட்டத்தையும், இந்திரா காந்தி தொடர்ச்சியாக பிரதமராக இருந்த காலகட்டத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் நரேந்திர மோடி தான் அதிக நாள்கள் இந்தியாவின் பிரதமராக இருந்தார் என்ற கருத்தைக் கூறுவது, இந்திய வரலாற்றை பாஜகவினர் தங்களுக்கு சாதகமாகத் திரிபு செய்யும் ஒரு முயற்சியே! கட்டுரையாளரின் ஜவஹர்லால் நேரு, நரேந்திர மோடி ஒப்பீடு கடந்த கால வரலாற்றின் உண்மை நிலையை நடுநிலையாளர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவியது. நன்றி.

**– இரா.சாந்தகுமார், கூடுவாஞ்சேரி**

## ● கண்ணீர்க் கவிதை




'இனி ஒரு போபால் வேண்டாம்' தலையங்கம் தொழிலாளிகளின் குரலாய் ஒலித்தது. தலைமுறை தலைமுறையாக பாதுகாப்பற்ற சூழலில் வாடி வரும் அவர்களுக்காகக் குரல் கொடுக்க யாரும் இப்போது முன் வருவது இல்லை. தொழிற் சங்கங்கள் எல்லாம் அரசியல் நிறுவனங்களாக மாறி வரும் நிலையில் சமரசம் ஓங்கி ஒலித்துள்ளது மன நிறைவு. அமீரே ஜமாஅத் தொடர் கட்டுரை மிக கனமானது. தந்தையர் தினம் அன்று சஞ்சீவ் பட் பிள்ளைகளின் மடல் ஒரு கண்ணீர்க் கவிதை. ஒரு சமகாலப் போராளி சஞ்சீவ் பட் ஐபிஎஸ் அதிகாரி. இவரை நாடே மறந்து வரும் நிலையில் சமரசம் தொடர்ந்து நினைவூட்டி வருகிறது. இறைவா இவரையும் இவரைப் போலவே போலி வழக்குகளில் சிறையில் வாடும் அனைத்து மக்களும் விடுதலை பெற அருள்வாயாக!

**– முஹம்மது ஆரிப், ஓசூர்**

## ● சஞ்சீவி மூலிகைச் சாறு

ஜவஹர்லால் நேருவும் நரேந்திர மோடியும் தலைப்பில் சேயன் இப்ராகிம் அவர்களின் ஒப்பீடு விழிமூடித் தூங்கும் மக்களின் கணிகளில் சரித்திரச் சஞ்சீவி மூலிகைச் சாறு பிழிந்து விட்டிருப்பது பாராட்டுக்குரியது. எத்தனை காலம் பதவி வகித்தார் என்பதை விட, சாதனைகளைப் பார்த்து மதிப்பிடுதல் சாலச் சிறந்தது. சாதனைகளில், மக்களின் வேதனைகள் விழிப்பு உணர்வுக்கு அவசியமாக அமைந்திருந்தது வரவேற்கத்தக்கது.

**– கவிஞர் காசீம், கடையநல்லூர்**

## ● கல் நெஞ்சும் கரையும் கடிதம்

'இனி ஒரு போபால் வேண்டாம்' சிறப்பான தலையங்கம். இதுபோல் எவ்வளவோ விஷயங்கள் நடக்கும்போது எல்லாம் சமரசம் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. ஆனால் சம்பந்தப்பட்ட அரசோ, துறைகளோ கண்டு கொள்ளாமல் போய்விடுவதுதான் வாடிக்கையாக இருக்கின்றது.

அன்புள்ள அப்பாவுக்கு கடிதம் கல் நெஞ்சத்தையும் கரைய வைக்கும். இப்படித்தான் எத்தனையோ அப்பாவி மக்கள் சிறைகளில் வாடுகின்றார்கள். அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். அவர்களுடைய மன உறுதியும் பக்குவப்பட்ட பண்பும் நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரும். இதயம் காப்போம் இதமான தொகுப்பாக இருக்

கின்றது. ஒரு மனிதனை இயக்க எல்லா உறுப்புகளும் தேவைப்பட்டாலும் இதயம் இன்றியமையாத ஒன்று.

கரும்பன் கோகுல் கரும்பு ஜூஸ் போலவே இனிப்பாக இருந்தது. சென்னையில் இருந்து கொண்டு மெரீனா கடற்கரைக்குச் செல்ல முடிவதில்லை எனக் கூறும் மக்களைக் கொண்டு வந்து சேர்த்து விட்டார் கரும்பன் கோகுல் சிறுகதையில். தொகுப்புகள் சம்பவங்கள் யாவும் அப்படியே நம்மை நகர்த்திக் கொண்டு சென்று மெரீனா கடற்கரையைக் கண்டுகளித்த உணர்வை ஏற்படுத்தியதோடு சிறுகதைக்குள் பல தரப்பட்ட மக்களைச் சந்திக்க வைத்து சிறு வியாபாரிகளின் வாழ்க்கைத் தரத்தையும் சொல்லி விட்டார். வாழ்த்துகள் நஸ்ரத் ரோஸி.

- சாந்த் உஸ்மானி, ஆலந்தூர்

## • சமரசத்தின் வளர்ச்சி

சமரசம் இதழ் தொடர்ந்து வெற்றிநடை போட்டு இலக்கிய சமுதாயப் பணிகள் செய்து வருவது பாராட்டுக்குரியது. கடந்த 44 ஆண்டுகளாக சமரசம் இதழை வாசித்து வருகிறேன். 31-03-1982 இல் வெளிவந்த சமரசம் இதழில் என்னுடைய கடிதம் பிரசுரமாகி இருந்தது. சமரசம் இப்போது மிகவும் வளர்ச்சி அடைந்து வண்ணத்தாளில் வாசகர் கருத்துகளை அருமையாகப் பிரதிபலிக்கின்றது.

- தமிழ்ச் செம்மல் கவிஞர் கடல்நாகராஜன், கடலூர்

## • இதயத்திற்கு இதம் தரும் தலைப்பு

‘நல்லறங்களும் சமுதாய மறுமலர்ச்சியும்’ என்ற தலைப்பே இதயத்திற்கு இதம் தருகிறது. திருக்குர்ஆன், நபிமொழிகள் மூலம் மிகச் சிறப்பான வழிகாட்டுதலை வழங்கியுள்ளீர்கள். இறைவனை நினைவு கூர்வதால்தான் உள்ளங்கள் அமைதி அடைகின்றன என்று இறைவனே கூறுகின்றான். மறுமையில் அமைதி பெறுவதே வாழ்வின் இலட்சியம். ஓதுவீராக என்பது முதல் மொழி. கல்வியைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் இஸ்லாம் முன்வரிசையில் இருக்கிறது.

- ப. பீர் இலாஹி, உத்தமபாளையம்

## • ஹீரோவை அடையாளம் காட்டும் சமரசம்

மோடியின் பதவிக் காலம் என்று அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் நேருவின் காலம் மக்களின் உதவிக் காலம். சிறை சென்றவர் நேரு. அவரை நாடாளுமன்றத்திற்கே சரியாக வராத மோடியுடன் ஒப்பிடுவதே பொருத்தமற்றது. போபாலைச் சுட்டிக்காட்டி எச்சரித்த தலையங்கம் நன்று. சஞ்சீவ் பட்டிற்கு பிள்ளைகள் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்து உண்மையான ஹீரோவை சமரசம் அடையாளப்படுத்தியுள்ளது. இதயம் குறித்த கட்டுரை மிகச் சிறப்பு.

- ப.குருசாமி, தேனி

## • ஆழமான கட்டுரை

தனியாக நீ, துணையாக யார்? மிகவும் ஆழமான கட்டுரை. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவரின் நல்லறங்கள் குறித்த கட்டுரைத் தொடர் இன்றைய காலத்தின் தேவை. மோடியையும், நேருவையும் ஒப்பிட முடியாது. இருவரைக் குறித்த பார்வையும் மிகச் சரியானது.

- T.M. பெரோஸ்கான், விருத்தாச்சலம்

## • அருமையான சிறுகதை

நஸ்ரத் ரோஸி எழுதிய கரும்பன் கோகுல் சிறுகதை அருமை. சென்னை, மெரீனா கடற்கரை, இன்றைய சூழல், உணவுக் கடைகளை கண்முன் நிறுத்தி விட்டார். சிறுவன் கோகுலின் துடுக்கான பேச்சு கதைக்கு அழகூட்டியது.

- ஜே. மஃரூப், குலசேகரன்பட்டினம்

## • போபாலைத் திரும்பிப் பார்க்க வைத்த தலையங்கம்

அப்பாவை மிதிக்கும் காலத்தில் அப்பாவை மதிக்கும் ஓர் அழகிய கடிதம் சஞ்சீவ்

பட்டிற்கு பிள்ளைகள் எழுதிய கடிதம்.ஈரான் மணமக்களின் மனிதாபிமானச் செயல் மகத்தானது. வாழ்த்துகள். போபாலைத் திரும்பிப் பார்க்க வைத்த தலையங்கம் அருமை.

– எம்.எஸ்.பாரூக், திருப்பாலத்துறை

### • இழப்பீட்டின் மூலம் ஈடுகட்ட முடியுமா?

கன்னிகைப்பேர் அமோனியா வாயுக் கசிவு போபாலை நினைவூட்டியது உண்மைதான். தொழில் இலாபங்களைக் கணக்கிடுபவர்கள் மனித உயிர்களை மதிப்பதில்லை. பட்டாசுத் தொழிற்சாலை மரணங்களும் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இழப்பீட்டின் மூலம் இதனை ஈடு கட்டிவிடலாம் என்று எண்ணுகிறார்கள். அரசு கவனம் கொண்டு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். சஞ்சீவ் பட்டிற்கு பிள்ளைகள் எழுதிய கடிதம் கண்டு வியந்து போனேன். இன்றைய இளைஞர்களுக்கு இக்கடிதம் ஒரு பாடம். கரும்பன் கோகுல் கதை சிறப்பு.

– இரா. சண்முகவேல், கீழக்கலங்கல்

### • இதயம் தொட்ட கட்டுரை

இதயம் குறித்த கட்டுரை படிப்பினைக்குரியது. இதயம் தொட்ட கட்டுரை. சஞ்சீவ் பட்டிற்கு பிள்ளைகள் எழுதிய கடிதம் நெகிழ வைத்துவிட்டது. அந்தக் குடும்பம் மீண்டும் மகிழ்வுடன் ஒன்றிணைய வேண்டும். நபிமொழியைக் கவிதையில் வடித்த ஆரூர் புதியவனுக்கு வாழ்த்துகள். நேரு, மோடி குறித்த கட்டுரை இருவரையும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

– S.மகுதனன்,M.லைலாம்மா, S.அஜித்தா, தேனி

### • அழிக்க முடியாத கரும்புள்ளி

போபால் விஷ வாயுப் பாதிப்பிலிருந்து இந்த நாடு இன்னும் படிப்பினை பெறாதது கொடுமையானது. வாயுக்கசிவுகள் அதிகாரிகளின் அலட்சியம், கவனக் குறைவுகள் காரணமாகவே நிகழ்கின்றன. தொழிற்சாலைகளின் ஆய்வுகளுக்குச் செல்லும் மேலதிகாரிகள் கடுமையான ஆய்வு (Strict Inspection) மேற்கொள்ள வேண்டும். இலஞ்சத்துக்கு ஆட்பட்டு விடாமல் அதை விட தொழிலாளர்கள், சுற்றியுள்ள மக்களின் உயிர்கள் விலை மதிப்பற்றவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

போபால் விஷ வாயுக் கசிவால் பல நூறு உயிர்கள் பலியானதுக்குக் காரணமான ஆன்டர்சனை தப்பிக்க விட்டதும், இந்நாள் வரை அவர் தண்டிக்கப்படாததும் இந்திய ஆட்சியாளர்களுக்கு அழிக்க முடியாத கரும்புள்ளியாகும்.

அநியாயமாக சிறையில் ஆண்டுக்கணக்கில் வாடும் சஞ்சீவ் பட் ஐஏஎஸ் அவர்களின் பிள்ளைகள் தந்தையர் தினத்தில் எழுதியுள்ள மடல் கல் மனதையும் கரையச் செய்யும்.

– S.A. சபீர் அஹ்மத், ஆணைக்காரன் சத்திரம்


## மணமகள் தேவை

மிகுந்த இறைபற்றுடன் இளமையும் உற்சாகமுமான 65 வயது பண்பு மிக்க சீனியர் எஞ்சினியருக்கு வாழ்க்கைத் துணை தேவை! விவாகரத்தான நிலையில் சிறப்புக் குழந்தை மூத்த மகளை தானே பராமரித்து வருகிறார்.

உடல்குறை ஏதுமின்றி சற்றே அறிவுத்திறன் குறைந்த மகள், தனது அன்றாடப் பணிகளை தானே செய்துகொண்டு சிறப்புப் பள்ளிக்கும் போய் வருபவர்.

சிறப்புக் குழந்தையின் இறுதிக் காலப் பொறுப்பை அவரது சகோதரி ஏற்றுக்கொள்வதோடு மறுமணத்திற்கு முன்வருபவருக்கான வாழ்நாள் முழுமைக்கான வசிப்பிடம் பொருளாதாரத்திற்கு உறுதியும் உண்டு!

**அன்பும் கருணையுமான முஸ்லிம் பெண்மணி தொடர்பு கொள்ள : 9345414553**

அல்லாஹ்வின் விருந்தாளிகளின் சேவையில் 31வது வருடம்

IATA

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

(இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது)

## இன்ஷா அல்லாஹ்

## 2027 ஹஜ் புக்கிங் நடைபெறுகிறது.

இவ்வாண்டு செப்டம்பர் 2026லிருந்து 2027 ரமலான் வரை ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்.

## உம்ரா குரூப்:

ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை உம்ரா குழு புறப்படுகிறது. உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்பு கொள்ளவும்

முழு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**
B3, Bushra House, 1st Floor, Old No. 46, New No. 6, Nowroji Road,
Chetpet, Chennai - 600 031. Ph : 044-4860 5012 / 3, 28594441 / 2 / 3
Email : info@alamanathhajservice.com
www.alamanathhajservcie.com

**தொடர்பு கொள்வீர்**
சென்னை 044-28594441 / 2 / 3
95516 622 31
91 98410 786 36

சரம் : 47
மலர் : 04

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

1448 ஸபர் 17 - ரபியுல் அவ்வல் 1 ● 2026 ஆகஸ்ட் 1-15

# நீதியின் குரல் வெல்லட்டும்

*நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி 2026 ஜூன் 28ஆம் நாள் டெல்லி ஜந்தர் மந்தரில் சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். அவருடைய போராட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஆதரவளித்து வந்த நிலையில் ஒன்றிய அரசு அவரது போராட்டத்திற்குச் செவி சாய்க்காமல் 21 நாள்களுக்குப் பிறகு வாங்சுக்கைக் கட்டாயமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது.*

*சோனம் வாங்சுக்கின் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி(JCP) டெல்லி ஜந்தர் மந்தரில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தது. நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலகுதல், இதனால் உயிரிழந்த மாணவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்குதல், வாங்சுக்கின் உண்ணாவிரதப் போராட்டதை முடிவுக்குக் கொண்டுவருதல், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது எந்த சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்காதிருத்தல் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்திய இந்தப் போராட்டத்தில் நாடு முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான மாணவ, இளைஞர்கள் கலந்து கொண்டனர்.*

*போராட்டக்களத்தில் இருந்து ஜூலை 20ஆம் நாள் நாடாளுமன்றம் நோக்கிச் சென்றவர்கள் மீது காவல்துறையினர் கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசியும், தடியடி நடத்தியும் கொடூரமாகத் தாக்கினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள் படுகாயம் அடைந்து தீவிர மருத்துவப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் இல்லம் அருகே காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டபோது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியைக் குண்டுக்கட்டாக இழுத்துச் சென்று கைது செய்துள்ளனர்.*

*அறவழியில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான காவல்துறையின் அடக்குமுறைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனு வாதிக்கப்பட்டது. 'இது போன்ற வழக்குகளால் உச்ச நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்றும், காவல்துறையினர் தாக்கிய காணொலியைப் பார்க்க எங்களுக்கு விருப்பமும் இல்லை. அதற்கான நேரமும் இல்லை' என்று கூறி அவசர வழக்காக இதனை விசாரிக்க முடியாது என்று நீதிபதி சூர்யகாந்த் கூறியுள்ளார்.*

*போராட்டம் வலுவடைந்து வரும் நிலையில் போராடுபவர்களின் குரலுக்குப் பதிலளிக்க வேண்டிய ஒன்றிய அரசு போராட்டத்தை அடக்கி ஒடுக்கும் முயற்சியிலேயே கவனம் செலுத்தி வருகிறது. CRPFஐச் சேர்ந்த 20 கம்பெனி துணை ராணுவத்தைக் களத்தில் இறக்கியுள்ளது ஒன்றிய அரசு. 16 மெட்ரோ ரயில்*

நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. மத்திய டெல்லியில் இணையதள சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிவுப் புகாரால் மே 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு 22 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் சூறையாடப்பட்டது. CBSE வினாத்தாள் திருத்தலில் நிகழ்ந்த மோசடியில் 17 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளானது. நீட் மட்டுமின்றி UGC - NET, CUTE, SSC, JEE போன்ற தேர்வுகளிலும் வினாத்தாள் கசிந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 152 முறை வினாத்தாள் கசிந்துள்ளது. தங்களுடைய எதிர்காலக் கனவு தகர்க்கப் பட்டதால் பல மாணவர்கள் தற்கொலை செய்து உள்ளனர். இதுவரை இதில் தொடர்புடைய குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்பட வில்லை, தண்டிக்கப் படவில்லை.

மருத்துவக் கனவுடன் கல்வி கற்று பெரும் போராட்டத்திற்குப் பிறகு நீட் தேர்வு எழுதி வெற்றி பெறும் வேளையில் குறுக்கு வழியில் பணத்தைச் செல வழித்து தங்களது வாய்ப்புகளைத் தட்டிப் பறிப்பதுடன், தகுதியான மாணவர்கள் புறம் தள்ளப்பட்டு தகுதியற்றவர்கள் மருத்துவப் பணிக்குச் செல்வதும் மாண வர்கள் மத்தியில் பெரும் மனக் குமுறலாகக் கனன்று கொண்டிருந்தது. அதுதான் இன்று பெரும் போராட்டமாக வெடித்துள்ளது.

மாணவர்களின் உண்மையான உள்ளத்து உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் இந்தியாவின் எதிர்காலக் கல்வியையே பாழ்படுத்தும் போக்கை ஒன்றிய அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றது. கல்வி அமைச்சருக்கான தகுதியை முற்றிலும் இழந்த தர்மேந்திர பிரதான் தாமாக முன் வந்து பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் இத்தனை அழுத்தங்களுக்குப் பிறகும் இலட்சக்கணக்கான மாணவ இளைஞர்களின் அற உணர்வுக்கு மதிப்பளிக்காமல் அமைச்சரின் பதவி யைக் காக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருவதும், பிரதமரின் அடர்த்தி யான மௌனமும் இந்த அரசைத் தூக்கி எறியவே வழி வகுக்கும்.

ஜனநாயகத்தின் தூண்களின் ஒன்றான நீதித்துறை இந்தியாவின் எதிர்காலத் தலைமுறையின் வாழ்வாதாரப் பிரச்னையில் நடந்து கொள்ளும் விதம் பெரும் கவலையளிக்கிறது. ‘இது நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் செயல், இதற் கான விருப்பமும், நேரமும் இல்லை’ என்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சூர்யகாந்தின் கூற்று நீதி மாண்புகளுக்கு எதிரானது.

மக்களாட்சித் தத்துவத்தில் மக்களின் குரலுக்குத்தான் முதல் இடம். தங்களை விமர்சிப்பவர்கள், தங்களுக்கு எதிரானவர்கள் என்ற மனப்பாங்கில் அவர்கள் மீது அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிடும் எந்த ஆட்சியாளர்களும் நீடித்ததாக வரலாறு இல்லை. மாணவ இளைஞர்களின் உண்மையான உணர்வுகளுக்கு ஒன்றிய அரசு மதிப்பளிக்க வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று ஒன்றிய கல்வி அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும். வினாத்தாள் கசிவு, மோசடியில் ஈடுபட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். சோனம் வாங்சுக்கின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வர வேண்டும்.

நீட் தேர்வு முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும். அதுதான் இந்தப் பிரச்னைகளுக்கான நிரந்தரத் தீர்வு. மாணவ இளைஞர்களின் அறவழிப் போராட் டத்திற்கு மதிப்பளிக்காமல் அதிகார பலத்தினால் அவர்களை அடக்கி விடலாம் என்று எண்ணினால் அது பெரும் பிழையாகி விடும். மாணவ இளைஞர் களின் போராட்டம் ஒருபோதும் தோற்றதில்லை. நீதியும் வாய்மையும் நிச்சயம் வென்றே தீரும்.

மேடை 34

*‘இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு’ என்ற தலைப்பில் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் ஒரு முக்கியமான கருத்தரங்கம், 2025 நவம்பர் 21 முதல் 23 வரை ஹைதராபாத்திலுள்ள அல் மஹத்துல் இஸ்லாமியில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் இந்திய இஸ்லாமிய நிதி மையம் (ICIF) பொதுச் செயலாளரும் சமரசம் இதழின் ஆசிரியருமான* ***H.அப்துர் ரகீப்*** *அவர்கள் ஆற்றிய உரை இந்த இதழின் மேடையை அலங்கரிக்கிறது.*

இந்த மாபெரும் கருத்தரங்கில் இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல் கலாம் ஆசாத் (1888 நவம்பர் 13 - 1958 பிப்ரவரி 22) அவர்களைச் சிறப்பாக நினைவுகூர விரும்புகிறேன். ஏனெனில் இந்தியாவின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் குறித்துப் பேசும்போது அவரது மாபெரும் ஆளுமையையும் இணையற்ற சாதனைகளையும் குறிப்பிடாமல் அந்த விவாதம் முழுமை பெறாது.

நமது அன்புக்குரிய நாட்டின் விடுதலைக்காகவும், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சார வளர்ச்சிக்காகவும் அவர் ஆற்றிய சேவைகள் இந்திய வரலாற்றில் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன. இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர் வகித்த பங்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதே அளவில் விடுதலைக்குப் பிறகு புதிய இந்தியாவின் கல்வி, அறிவியல், கலாச்சார அடித்தளங்களை உருவாக்கியதிலும் அவரது பங்களிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் மௌலானா ஆசாத் முன்னணியில் இருந்து வழிநடத்தினார். கிலாபத் இயக்கம், துருக்கிய இயக்கம், பின்னர் வெள்ளையனே வெளியேறு இயக்கம் என அனைத்திலும் அவர் சிறப்பான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார்.

இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகப் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 1923ஆம் ஆண்டு தனது முப்பத்தைந்து வயதிலேயே காங்கிரஸின் மிக இளைய தலைவராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1940 முதல் 1946 வரை தொடர்ந்து அதன் தலைவராகப் பணியாற்றினார்.

இரண்டாம் உலகப்போர், பிரிட்டிஷ் அரசுடன் நடைபெற்ற முக்கிய பேச்சுவார்த்தைகள், அமைச்சரவைக் குழுவின் வருகை, இந்திய விடுதலைத் திட்டம் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் நடைபெற்ற காலம் அதுவாகும். அந்நேரத்தில் அவர் வெளிப்படுத்திய அரசியல் தொலைநோக்கு, உறுதியான தலைமைத்துவம், ஆற்றிய உரைகள் இந்திய வரலாற்றில் என்றும் நினைவுகூரப்படும்.

மௌலானா ஆசாத் இந்து முஸ்லிம் ஒற்றுமையின் உறுதியான ஆதரவாளராகவும், நாட்டின் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்த தலைவராகவும் விளங்கினார். தனது சொற்பொழிவுகள், எழுத்துகள் வாயிலாகவும் குறிப்பாக அல் ஹிலால், அல் பலாக் இதழ்கள் மூலமாகவும் இந்திய விடுதலையையும் தேசிய ஒற்றுமையையும் வலியுறுத்தினார்.

அவரது புரட்சிகரமான எழுத்துகள் பிரிட்டிஷ் ஆட்சியினரை அச்சமடையச் செய்தன. அதன் விளைவாக, அல் ஹிலால் இதழ் தடைசெய்யப்பட்டதுடன் கடுமையான அபராதங்களும் விதிக்கப்பட்டன. இருப்பினும் மௌலானா ஆசாத் தமது கொள்கையிலிருந்து சிறிதும் பின்வாங்காமல் உறுதியாக நிலைத்திருந்தார்.

## கல்வித் துறையில் மௌலானா ஆசாத்தின் பங்களிப்பு

இந்தியா விடுதலை பெற்ற பிறகு மௌலானா அபுல் கலாம் ஆசாத் விடுதலை இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரது ஆழ்ந்த அறிவும், விரிவான பார்வையும், தொலைநோக்குச் சிந்தனையும் அந்த உயரிய பொறுப்பிற்கு மிகவும்

# இந்தியாவின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முஸ்லிம்களின் பங்கு




பொருத்தமானதாக அமைந்தன. அவர் நவீன இந்தியாவின் கல்வி அமைப்புக்கான வலுவான அடித்தளத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் கல்வி, அறிவியல், கலாச்சாரம், நாகரிக வளர்ச்சிக்குத் தேவையான பல முக்கிய தேசிய நிறுவனங்களை உருவாக்குவதிலும் முன்னோடியாக விளங்கினார். அவர் உருவாக்கிய அந்த அடித்தளத்தின் பலன்களை இந்தியா இன்றளவும் அனுபவித்து வருகிறது.

அவரது இணையற்ற கல்விச் சேவையைப் போற்றும் வகையில் இந்திய அரசு ஆண்டுதோறும் நவம்பர் 11ஆம் நாளை தேசிய கல்வி தினமாகக் கொண்டாடுகிறது. இது அவரது கல்விப் பணிக்கான உயரிய தேசிய அங்கீகாரமாக மட்டுமல்லாமல் இந்திய முஸ்லிம் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு சிறப்புமிக்க நிகழ்வாகும்.

கல்வி என்பது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை என்ற கொள்கையில் மௌலானா ஆசாத் உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தார். அனைவருக்கும் தொடக்கக் கல்வி கிடைக்க வேண்டும் என்பதையும், பதினான்கு வயது வரையிலான அனைத்து ஆண், பெண் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். பெண்களின் கல்வி மேம்பாட்டிற்கும் அவர் தனிப்பட்ட முக்கியத்துவம் அளித்தார். அவரது விடா முயற்சியின் விளைவாக இக்கொள்கைகள் பின்னர் இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இடம்பெற்று நாட்டின் கல்வி வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக அமைந்தன.

உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றை தேசிய வளர்ச்சியின் முக்கியத் தூண்களாக அவர் கருதினார். அவரது வழிகாட்டுதலின் கீழ் பல்கலைக்கழக மானியக் குழு(UGC), இந்திய தொழில்நுட்பக் கழகங்கள்(IIT), அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம்(AICTE) ஆகியவை வலுப்படுத்தப்பட்டன. மேலும் பல முக்கியமான அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்தியா அரசியல் விடுதலை பெற்ற நாடாக மட்டும் இல்லாமல், அறிவு, ஆராய்ச்சி, தொழில்நுட்பத் துறைகளிலும் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ வேண்டும் என்பதே அவரது தொலைநோக்குச் சிந்தனையாக இருந்தது.

மௌலானா ஆசாத் கல்வித் துறையோடு மட்டுமல்லாமல் இந்தியாவின் கலாச்சார, நாகரிக அடையாளத்தைப் பாதுகாத்து வளர்ப்பதிலும் மறக்க முடியாத பங்களிப்பை ஆற்றினார். அவரது தொலைநோக்குப் பார்வையின் விளைவாக சாகித்ய அகாடமி, சங்கீத நாடக அகாடமி, லலித் கலா அகாடமி போன்ற தேசிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் இந்தியாவின் மொழிகள், இலக்கியம், இசை, நாடகம், ஓவியம், நுண்கலைகளைப் பாதுகாத்து, வளர்த்து, உலக அரங்கில் அறிமுகப்படுத்துவதில் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்காற்றி வருகின்றன.

அதேபோல் இந்தியாவின் கலாச்சார உறவுகளையும் கல்வி, அறிவியல் ஆராய்ச்சிகளையும் உலக நாடுகளுடன்

வலுப்படுத்தும் நோக்கில் இந்திய கலாச்சார உறவுகள் மன்றம்(ICCR) நிறுவுவதிலும் அவர் முக்கியப் பங்காற்றினார். இந்திய நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் உலகிற்கு எடுத்துச் செல்வதில் இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றி வருகிறது.

இன்று மௌலானா ஆசாத் வகுத்த கல்விக் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள், குறிப்பாக இந்திய தொழில்நுட்பக் கழகங்கள்(IIT) உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்தி வருகின்றன. இந்நிறுவனங்களில் பயின்ற ஆயிரக்கணக்கான இந்தியப் பொறியாளர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் உலகின் முன்னணி நிறுவனங்களில் உயர்ந்த பொறுப்புகளை வகித்து வருகின்றனர்.

பல்வேறு மதிப்பீடுகளின்படி IITகளில் பட்டம் பெற்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் அமெரிக்கா உள்ளிட்ட பல முன்னேறிய நாடுகளில் அறிவியல், தொழில்நுட்பம், தொழில்துறை, நிர்வாகத் துறைகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் கூகுளின்(Google) தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, IMF நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ரகுராம் ராஜன் உள்ளிட்ட பலர் உலகளவில் இந்தியாவின் திறமையைப் பறைசாற்றி வருகின்றனர்.

இத்தகைய சாதனைகள் அனைத்தும் விடுதலை இந்தியாவின் தொடக்கக் காலத்திலேயே மௌலானா ஆசாத் உருவாக்கிய கல்விக் கொள்கைகளின் தொலைநோக்குப் பார்வைக்கு சான்றாக அமைந்துள்ளன. மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஓர் அரசியல் தலைவராக மட்டுமல்ல சிறந்த சமய அறிஞராகவும், திருக்குர்ஆன் விளக்கவுரையாளராகவும், ஆழ்ந்த சிந்தனையாளராகவும், திறமையான அரசியல் வியூக நிபுணராகவும் விளங்கினார். இஸ்லாமிய அறிவியலையும் நவீன உலகின் தேவைகளையும் ஒருங்கிணைக்கும் கல்விச் சிந்தனையை அவர் முன்வைத்தார். அதன் விளைவாக இந்தியாவிற்குப் புதிய அறிவு சார் அடையாளத்தை உருவாக்கிய பல கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாயின. உண்மையில் மௌலானா ஆசாத்தின் சாதனைகள் இந்திய வரலாற்றில் என்றும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**குர்ஆன் வலியுறுத்திய முறையில் ஜகாத்தை ஒழுங்குபடுத்தினால் மட்டும் போதும்; சமுதாயத்தின் பல பொருளாதார, சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு தானாகவே உருவாகும்.**



## ஜகாத் குறித்த மௌலானா ஆசாத்தின் தொலைநோக்குப் பார்வை

இந்தியப் பிரிவினைக்குப் பிறகு இந்திய முஸ்லிம்கள் புதிய அரசியல், பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளை எதிர்கொண்டனர். அத்தகைய காலகட்டத்தில் சமுதாயத்தின் மறுகட்டமைப்பிற்குத் தேவையான தொலைநோக்கு மிக்க வழிகாட்டுதலை மௌலானா ஆசாத் வழங்கினார். தேசிய ஒருமைப்பாடு, இந்து முஸ்லிம் நல்லிணக்கம், கல்வி முன்னேற்றம், பொருளாதார வலிமை ஆகியவற்றிற்காக அவர் தொடர்ந்து பாடுபட்டார்.

இந்தப் பின்னணியில் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளிக்கிழமை உரையில் ஜகாத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட சமூக அமைப்பாக உருவாக்குமாறு இந்திய முஸ்லிம்களுக்கு அவர் உருக்கமான அழைப்பை விடுத்தார். பின்னர் அந்த உரை ‘ஜகாத்தின் உண்மை’ என்ற சிறு நூலாக வெளியிடப்பட்டது. ஜகாத்தின் நோக்கம், சமூகப் பயன், பொருளாதார முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்கும் இந்நூல் இன்றும் முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது.

அந்த உரையில் அவர் ‘முஸ்லிம்கள் இன்று வேறு

எதையும் செய்ய முடியாவிட்டாலும், குர்ஆன் வலியுறுத்திய முறையில் ஜகாத்தை ஒழுங்கு படுத்தினால் மட்டும் போதும்; சமுதாயத்தின் பல பொருளாதார, சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு தானாகவே உருவாகும். எழுந்து நில் லுங்கள். ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு பகுதியிலும் குறைந்தது ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவையாவது அமையுங்கள். அவர்கள் ஜகாத்தைச் சேகரித்து, பொறுப்புடனும் வெளிப் படைத் தன்மையுடனும் நிர்வகிக்கட்டும். விரை வில் அந்தப் பகுதி முழுவதும் இந்த முயற்சி யில் பங்குகொள்வதை நீங்கள் காண்பீர்கள். அதன்மூலம் மக்களின் நம்பிக்கையும், வளமும், கண்ணியமும் மீண்டும் நிலைபெறும்' என்று குறிப்பிட்டார்.

## இஸ்லாமியப் பொருளாதார வளர்ச்சியில் ஹைதராபாத்தின் பங்களிப்பு

இந்தியாவின் பொருளாதார அறிவியல் வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பைப் பற்றி பேசும்போது, ஹைதராபாத் தக்காணத் தின் வரலாற்றுச் சேவையைப் புறக்கணிக்க முடியாது. இந்நகரம் அறிவியல், கலாச்சாரத் துறைகளில் மட்டுமல்லாமல் இஸ்லாமியப் பொருளாதாரச் சிந்தனையையும் அதன் வளர்ச்சியையும் ஊக்குவித்த முக்கிய மைய மாகவும் திகழ்ந்துள்ளது.

ஹைதராபாத்திலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை கல்வி, ஆராய்ச்சித் துறைகளில் குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. இப் பல் கலைக்கழகத்துடன் தொடர்புடைய பல அறி ஞர்கள், சிந்தனையாளர்கள், பொருளியல் வல்லுநர்கள், இஸ்லாமியப் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றுச் சிறப்புமிக்க பணியை ஆற்றியுள்ளனர். அவர்களில் ஏறத்தாழ இருபத் தைந்து ஆண்டுகள் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் இறையியல் பேராசிரியராகப் பணியாற்றிய மௌலானா சையத் மனாஸிர் அஹ்ஸன் கிலானி குறிப்பிடத்தக்கவர்.

அவர் 1945ஆம் ஆண்டு இஸ்லாமியப் பொருளியல் என்ற முக்கியமான நூலை எழுதி னார். அதில் பொருளாதார முன்னேற்றத் திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியை அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப் படும் அறப்போரின் ஒரு வடிவமாக விளக்கி, இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தெளிவாக எடுத்துரைத்தார். டாக்டர் இக்பால் குரேஷி எழுதிய 'இஸ்லாமும் வட்டியும்' என்ற நூல் இஸ்லாமியப் பொருளாதாரத் துறையில் முக்கியமான கல்விசார் பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் மௌலானா சையத் அபுல் அஃலா மௌதூதி ஹைதராபாத்திலிருந்து வெளி யான தனது 'தர்ஜுமானுல் குர்ஆன்' இதழின் வாயிலாக வட்டி முறைக்கு எதிராகவும், இஸ்லா மியப் பொருளாதாரத்திற்கு ஆதரவாகவும் வலு வான அறிவுசார் இயக்கத்தை முன்னெடுத்தார். அவரது எழுத்துகள் துணைக்கண்டம் முழு வதும் இஸ்லாமியப் பொருளாதாரம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றின.

இந்தச் சூழலில் உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் புகழ்பெற்ற சட்ட அறிஞரான டாக்டர் முஹம்மது ஹமீதுல்லாஹ் அவர் களைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அவர் 1944ஆம் ஆண்டு 'வட்டியில்லா கடன் சங்கங்கள்' என்ற தலைப்பில் ஒரு முக்கிய மான ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார். அதன் சில பகுதிகள் பின்னர் மாரிஃப்(ஆசம் கர்) என்ற மாத இதழிலும் வெளிவந்தன. அந்தக் கட்டுரையில், 1891ஆம் ஆண்டி லேயே ஹைதராபாத்தில் வட்டியில்லா கடன் வழங்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது என்ற வரலாற்றுச் செய்தியை அவர் பதிவு செய்கிறார். அக் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு இன்னும் முழுமை யாக வளர்ச்சி பெறாத நிலையில் ஹைதராபாத் இந்தத் துறையில் முன்னோடியாக விளங் கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏறத்தாழ ஐம்பது முதல் அறுபது ஆண்டு களுக்கு முன்பே ஹைதராபாத்தின் தொண்டு மனப்பான்மை கொண்ட பெருந்தகையர்கள்

‘அஞ்சுமன் முய்யிதுல் இக்வான்’ என்ற வட்டியில்லா கடன் சங்கத்தை நிறுவினர். அதன் நிறுவனர்களுக்குப் பிறகு, மஜ்லிஸ் உலமாயே தக்கான் அமைப்பின் அறங்காவலரான மௌலானா சையத் முஹம்மது பாட்ஷா ஹுசைனி அவர்களின் வழிகாட்டுதலிலும் ஆதரவிலும் அந்த நிறுவனம் தொடர்ந்து வளர்ச்சி பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆசிஃபியா அரசின் ஆட்சிக்காலத்தில் பல வட்டியில்லா கடன் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றின் சேவையால் முஸ்லிம்கள் மட்டுமன்றி பிற சமுதாயத்தினரும் பயனடைந்தனர். இது இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைகள் சமூக நலனை நோக்கியவை என்பதை நடைமுறையில் எடுத்துக்காட்டிய சிறந்த உதாரணமாகும்.

இஸ்லாமியப் பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கில் மஜ்லிஸ் இத்திஹாதுல் முஸ்லிமீன் இயக்கத்தின் நிறுவனரான பகதூர்யார் ஜங் ஹைதராபாத்தில் ஓர் அறிவியல், பொருளாதார ஆய்வு மன்றத்தை உருவாக்கினார். அதில் பொருளாதார வல்லுநர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் பங்கேற்று இஸ்லாமியப் பொருளாதாரத்தின் கோட்பாடுகளையும் நடைமுறை அம்சங்களையும் விரிவாக ஆராய்ந்தனர். இஸ்லாமியப் பொருளாதார வளர்ச்சி அவரது வாழ்நாள் இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது. அதனால் இத்துறையின் வளர்ச்சிக்காக அவர் பல்வேறு அறிவுசார் முயற்சிகளை முன்னெடுத்தார்.

ஹைதராபாத்தைத் தாண்டியும் இந்தியா முழுவதும் பல அறிஞர்கள் இஸ்லாமியப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்களில் டாக்டர் முஹம்மது நஜாத்துல்லாஹ் சித்தீக்கி, டாக்டர் ஃபஸ்லுர் ரஹ்மான் ஃபரீதி, பேராசிரியர் குர்ஷித் அஹமது, டாக்டர் முஹம்மது உமர் சாப்ரா, டாக்டர் அவ்சாஃப் அஹமது ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த அறிஞர்கள் வட்டியில்லா வங்கி முறை, இஸ்லாமிய நிதி அமைப்பு, மாற்றுப் பொருளாதாரக் கோட்பாடுகள் குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை இந்தியாவிற்கு மட்டுமன்றி உலக அரங்கிற்கும் அறிமுகப்படுத்தினர். இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் இந்த மனிதநேயமும் நீதியும் நிறைந்த பொருளாதார முறை நம் நாட்டிலும் மேலும் விரிவாக நடைமுறைக்கு வரும் என்ற நம்பிக்கை நமக்குள்ளது.

இந்த மேற்கோள்கள் மௌலானா ஆசாத் ஓர் அரசியல் தலைவரோ கல்வியாளரோ மட்டுமல்ல; இஸ்லாமிய சமூகத்தின் பொருளாதார மறுமலர்ச்சியை ஆழமாகச் சிந்தித்த தொலைநோக்குடைய அறிஞர் என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அவரது பார்வையில் ஜகாத் என்பது தனிநபரின் வழிபாட்டுக் கடமை மட்டுமல்ல; வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூகப் பின்தங்கிய நிலைகளை நீக்குவதற்கான வலிமையான சமூக பொருளாதார அமைப்பாகும்.

இன்றைய மாறிவரும் சமூக, பொருளாதார, கல்விச் சூழலில் நமது அன்பு நாட்டின் பொதுமக்களும் இஸ்லாமிய சமுதாயமும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு நடைமுறைத் தீர்வுகளை உருவாக்குவதே இதைவிட முக்கியமான பணியாகும். இன்று நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தி நாட்டின் அறிஞர்கள், அறிவுஜீவிகள், சமூகத் தலைவர்கள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து திறந்த மனதுடனும் நேர்மையான நோக்கத்துடனும் கலந்துரையாட வேண்டும். அவ்வாறு கலந்தாலோசித்து எதிர்காலத்திற்கான தெளிவான செயல் திட்டத்தை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

எனவே இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்கள் இதே நோக்கத்துடனும் விரிவான தயாரிப்புகளுடனும், எதிர்காலச் செயல் திட்டத்தை மையமாகக் கொண்ட மற்றொரு தேசிய கருத்தரங்கை விரைவில் நடத்த வேண்டும் என்று அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறேன்.

**தமிழில் : மௌலவி சமியுல்லாஹ் உமரி**

# நல்லறங்கள் எத்தகையதாய் இருக்க வேண்டும்?

● சையத் சஆதத்துல்லாஹ் ஹுசைனி

● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்



அதிமதிகமாக நல்லறங்களில் ஈடுபட வேண்டும் என்றே குர்ஆனிலும் நபிமொழிகளிலும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. நல்லறங்களின் எண்ணிக்கை(Quantity) அதிகமாக இருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்ற வேளையில் அந்த நல்லறங்களின் தரமும்(Quality)மிக மிக மேம்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகின்றது.

இதற்கு அழுத்தம் கொடுப்பதற்காக திருக்குர்ஆனிலும் நபிமொழியிலும் 'இஹ்சான்' என்கிற வலுவான, கருத்துச் செறிவுமிக்க சொல் ஆளப்பட்டுள்ளது. இஹ்சான் என்பதற்கு செய்யப்படுகின்ற நல்லறத்தின் தரம் மிக மிக உயர்வானதாக இருத்தல் வேண்டும் என்பதாகும். அதாவது நல்லறம் எதுவானாலும் அதனை மிக மிக நேர்த்தியாக, சிறப்பாக, செம்மையாகச் செய்ய வேண்டும்; அதன் மூலமாகக் கிடைக்கின்ற பயனும் நன்மையும் உச்சபட்சமானதாய் இருக்க வேண்டும்; அதற்கும் மேலாக அந்தப் பயனும் நன்மையும் அதிகதிகமான மக்களுக்குக் கிடைக்க வேண்டும்.

இஹ்சான் என்கிற சொல் ஹஸன் என்கிற சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இமாம் ராகிப் அஸ்ஃபஹானி அவர்கள் 'இஹ்சான்' என்பது எதனைக் குறிக்கும் என்பதை மிக அழகாக விவரித்துள்ளார்: 'ஹசன்' என்பது எல்லாக் கோணங்களிலும், எல்லா அடிப்படைகளிலும் மனதை ஈர்ப்பதாக, அழகானதாய் இருக்கும்; அது அறிவார்ந்த அடிப்படையில் பார்க்கின்ற போது மிக மிகப் பொருத்தமானதாக இருக்கும்; உலகத்து மோகத்தின் அடிப்படையில் பார்த்தாலும் அது மனதைக் கொள்ளை கொள்ளக் கூடியதாக இருக்கும்; எல்லா உணர்வுகளையும் சுண்டியிழுப்பதாக இருக்கும்; வெறுக்கத்தக்க, விரும்பத்தகாத யாதொன்றின் எந்தவொரு சுவடும் அதில் அறவே இருக்காது'.

நாம் மேற்கொள்கின்ற நல்லறங்களும் இதே இஹ்சான் எனும் உன்னத படித்தரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே வல்லோன் அல்லாஹ் எதிர்பார்க்கின்றான்: 'அவன் மரணத்தையும் வாழ்வையும் ஏற்படுத்தினான்; உங்களில் யார் மிகச் சிறந்த செயல் புரியக் கூடியவர் என்று உங்களைச் சோதிக்கும் பொருட்டு!' (திருக்குர்ஆன் 67:2).

அன்பு நபிகளார்(ஸல்), 'நீங்கள் எந்த ஒரு வேலையைச் செய்தாலும் இஹ்சான் எனும் உயர்ந்த படித்தரத்துடன் அழகாக, சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றே அல்லாஹ் கட்டாயமாக்கி இருக்கின்றான். எனவே, நீங்கள் ஒரு பிராணியை அறுக்கின்ற போதும் ஒழுங்காக, சிறப்பாக, நேர்த்தியாகச் செய்ய வேண்டும்' என்று கூறினார்கள்.

தரத்தை மதிப்பிடுவதற்கான ஒரு முக்கிய மான அளவுகோல் 'பயன் தரும் திறன்' ஆகும். அதாவது அதிகமதிகமான மக்க ளுக்கு உச்சபட்ச பயனைத் தருகின்ற நல்லறம் தான் மிகவும் உயர்தரமான நல்லறம் ஆகும். புகழ்பெற்ற நபிமொழி ஒன்றில் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:

'மற்றவர்களுக்கு நன்மையளிக்கின்ற, பயன் தருகின்ற மனிதர்கள்தாம் அல்லாஹ் வுக்கு மிகவும் விருப்பமான அடியார்கள் ஆவர். எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு மற் றெல்லாவற்றையும் விட மிகவும் விருப்பமான நல்லறங்களின் விவரம் வருமாறு: 'ஒரு முஸ்லிம் சக முஸ்லிமை மகிழ்வித்தல்; அவரு டைய சிரமம் ஏதேனும் ஒன்றைப் போக்குதல்; அவருக்கு உணவளித்தல். மஸ்ஜிதுந் நபவி எனும் இந்தப் பள்ளிவாசலில் ஒரு மாத காலம் இஃதிகாஃப் இருப்பதைக் காட்டிலும் முஸ்லிம் சகோதரர் எவரேனும் ஒருவரின் தேவையை நிறைவேற்றுவதற்காக அவருடன் சேர்ந்து செல்வதே எனக்கு மிகவும் விருப்பமான தாகும்.

(மேலும் நினைவில் வைத்திருங்கள்) எவர் தன்னுடைய கோபத்தைத் தணித்துக் கொண்டாரோ அல்லாஹ் அவருடைய குறைகள் மீது திரையைப் போட்டுவிடுவான். தன்னுடைய கோபத்தைச் செயல்படுத்துகின்ற வலிமை பெற்றிருந்தும் எவர் அதனை விழுங்கிக் கொள்கின்றாரோ மறுமை நாளில் அவருடைய மனதை அல்லாஹ் நம்பிக்கை களைக் கொண்டு நிரப்பி விடுவான். எவர் தன்னுடைய சகோதரரின் தேவையை நிறைவேற்றி வைப்பதற்காக அவருடன் நடந்து செல்கின்றாரோ கால்கள் நடுங்கி தடுமாறக் கூடிய நாளில் அல்லாஹ் அவருக்கு நிலைத்து நிற்கின்ற உறுதிப்பாட்டை வழங்குவான். ஒருவரின் மோசமான நடத்தை அவர் செய்த நல்லறங்கள் அனைத்தையும் 'தேனில் புளிப்புச் சாற்றைக் (Vinegar) கலக்கும் போது அது முற்றாகக் கெட்டுப் போவதைப் போன்று' நாசமாக்கிவிடும்.

நிலைமைகள், கொள்திறன்கள் ஆகியவற் றைப் பொறுத்தே யாதொன்றின் பயன்பாடும் தீர்மானமாகும். எனவே அமல்களின் தரமும் சிறப்பும் கூட கால, இடச் சூழல்களையும் சமுதாயத்தின் தேவைகளையும் கொண்டே நிர்ணயமாக வேண்டும். அதாவது எந்த இடத் தில் எந்தச் சமுதாயத்தில் எந்தப் பணியின் தேவை எந்த அளவுக்கு அதிகமாக இருக் கின்றதோ அந்த அளவுக்கு அந்தப் பணியின் சிறப்பும் தரமும் கூடிக் கொண்டே போகும் என்றே அறிஞர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

அல்லாமா யூசுஃப் அல்கர்ளாவி அவர்கள் இந்த விதியைச் சுட்டிக்காட்டி, இதன் அடிப்படையில் நாம் வாழ்கின்ற சம கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பார்க் கின்ற போது வியாபாரத்திலும் தொழில் துறையிலும் முன்னேறுவதும் வளர்வதும், மேலும் அறிவியல், தொழில்நுட்பம் போன்ற வற்றைக் கற்று, தேர்ந்து அவற்றில் ஆய்வும் ஆராய்ச்சியும் மேற்கொள்வதும்தாம் மிகச் சிறந்த நல்லறங்கள் என்று அறிவித்திருக் கின்றார்.

இந்தியாவின் தற்போதைய நிலைமை களைக் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது சகோதர சமுதாயத்தாருடனான உறவுகளை யும் தொடர்புகளையும் மேம்படுத்துவதும், அவர்கள் வரையில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதும், முஸ்லிம் சமுதாயத்தைச் சீர்திருத்துவதும், முஸ்லிம் களையும் பிற பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட சமூகக் குழுக்களையும் கல்வி, பொரு ளாதாரம், வணிகம், தொழில் போன்ற களங்களில் முன்னேறச் செய்வதும், நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காகப் பாடுபடுவதும், ஒடுக்கப் பட்ட, கொடுமைக்கு ஆளான மக்களின் பாது காப்புக்காக முயல்வது போன்ற பணிகள் முன்னுரிமை தரப்பட வேண்டிய ஸாலிஹான அமல்களாக அறிவிக்கப்பட வேண்டும்.

நபிமொழிகளில் 'இத்கான்' என்கிற மற்றுமோர் மரபுச் சொல்லும் ஆளப்பட் டுள்ளது. 'நீங்கள் எந்தவொரு வேலையைச் செய்தாலும் அதனை தரமான முறையில் நிறைவாகவும் குறையில்லாமலும் செய்து முடிப்பதே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்ப

மானதாகும்' என நபி(ஸல்) அவர்கள் அறிவுறுத்தி இருக்கின்றார்கள். 'இத்கான்' என்கிற சொல்லுக்கு 'வல்லமை, தேர்ச்சி, சிறப்பு, பழுதோ குறையோ இல்லாமை' என்றெல்லாம் பொருள்கள் உண்டு.

எல்லா நிலைகளிலும் எல்லா அம்சங்களிலும் தரமானவையாய், குறையோ பழுதோ இல்லாதவையாய் இருப்பதே ஸாலிஹான அமல்களின் அதிமுக்கியமான பண்பாகும் என்றே இதற்குப் பொருள். தொடர் கவனம், தொடர் ஆய்வு, தொடர் உழைப்பு, புதுமை, கண்டுபிடிப்பு, வளர்ச்சி ஆகியவற்றால் மட்டுமே இந்த இலக்கை வென்றடைய முடியும் என்பது யதார்த்தம். எந்தவொரு நல்லறத்தையும் பாரம்பர்யமான முறையில் ஒரு சடங்கை நிறைவேற்றி முடிப்பதைப் போன்று செய்து முடிப்பது இங்கு விரும்பப் படவில்லை. அதற்கு மாறாக அந்த நல்லறத்தை இன்னும் இன்னும் அதிகத் தரம் கொண்டதாய், குறை அற்றதாய், நன்மை அளிப்பதாய் ஆக்கிக் கொள்வதற்கான தொடர் முயற்சியே இங்கு விரும்பப்படுகின்றது.

இன்னொரு நபிமொழியில் எந்தவொரு நல்லறத்தையும் இடைவிடாமலும் தொடர்ந்து செய்வதும் ஸாலிஹான அமலின் விரும்பத்தக்க பண்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அளவில் சிறியதாக இருந்தாலும் இடைவிடாமலும் தொடர்ந்தும் செய்யப்படுகின்ற நல்லறமே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது' என்று அறிவித்திருக்கின்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் கண நேரத்தில் சடங்குத்தனமாக மேற்கொள்ளப்படுகின்ற நல்லறங்கள் விருப்பத்துக்குரியவை அல்ல. அதற்கு மாறாக தனி மனிதருக்குள்ளும் சமூகத்திலும் அழுத்தமான தாக்கங்களையும் மாற்றத்தையும் ஏற்படுத்துகிற அளவுக்குப் பொறுமையோடும், இடைவிடாமலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற ஸாலிஹான அமல்களுக்கே முன்னுரிமை தரப்பட வேண்டும்.

நபிமொழிகளில், 'பயனாளிகளுக்கு நீண்ட காலம் வரை பயன் அளித்துக் கொண்டே இருக்கின்ற, அவர்களின் வாழ்வாதாரப் பிரச்னையை அல்லது அது தொடர்பான விவகாரங்களை முற்றாகத் தீர்த்து விடுகின்ற, நிலையான தீர்வை அளிக்கின்ற (Sustainable) ஸாலிஹான அமல்கள்தாம் சிறப்பான அமல்கள்' என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது. இஸ்லாத்தின் இந்த உயிரோட்டமான உணர்வும் தெளிவும்தாம் ஸதகதுல் ஜாரியா (நீடித்த பயனைத் தருகின்ற தர்மங்கள்) என்கிற கருத்தோட்டத்துக்கும் வக்ஃப் நிறுவனங்களுக்கும் வித்திட்டிருக்கின்றது.

இந்த விவரங்களிலிருந்து ஸாலிஹான அமல்கள் குறித்து உருவாகின்ற கருத்தோட்டம் அனைத்தையும் தழுவியதாக, பரந்து விரிந்ததாக இருக்கின்றது. மக்களுக்கு நன்மையளிப்பதற்காக இடைவிடாமல் போராட வேண்டிய, தம்மால் இயன்றவரை உழைக்க வேண்டிய, இறுதி எல்லை வரை செல்ல வேண்டிய அவசியத்தை இது உணர்த்துகின்றது. ஸாலிஹான அமல்களில் இடைவிடாமல் மும்முரமாக இயங்கிக் கொண்டே இருப்பவன் தான் ஸாலிஹான முஃமின் ஆவான்.

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுகின்ற நோக்கத்தோடு வணக்க வழிபாடுகளிலும், அல்லாஹ்வின் அன்பில் திளைத்து, அவனுடைய உவப்பைப் பெறுகின்ற எண்ணத்தோடு அல்லாஹ்வின் அடியார்களுக்குச் சேவையாற்றுவதிலும் அவன் தொடர்ந்து மூழ்கியிருப்பான். மக்களுக்கு நன்மையளிப்பதற்கான பணிகளில் எதனைச் செய்வதற்கான தகுதியும் ஆற்றலும் தமக்கு இருப்பதாக அவன் நினைத்தாலும் முழுமூச்சுடன் அவன் அதில் இறங்கிவிடுவான்; மேலும் முழுமையான வல்லமையோடும், நிபுணத்துவத்தோடும் மிக மிக உயர்ந்த தரத்தில் அதிகமதிகமான நன்மையும் பயனும் அளிக்கின்ற அளவில் அந்தப் பணியைச் செய்து முடிப்பான்.

*(தொடரும்)*

விடுதலை தின சிறப்புக் கட்டுரை

# வேலூர் புரட்சி 1806

**1857 ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்க் கலகமே இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்று வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலேய ஆட்சியினருக்கு எதிராக இந்திய நாட்டு சிப்பாய்களும், ஆங்கிலேய ஆட்சியாளர்களால் பாதிக்கப்பட்ட சிற்றரசர்களும், குறுநில மன்னர்களும் ஒன்று இணைந்து நடத்திய போர் இது.**

**இந்தப் போரில் சிப்பாய்கள் முதலில் வெற்றியடைந்த போதிலும் பின்னர் ஆங்கிலேயரின் கை ஓங்கியது. கிளர்ச்சி அடக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான சிப்பாய்களும், அப்பாவிப் பொதுமக்களும் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர். இந்து – முஸ்லிம்கள் இணைந்து ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு எதிராக நடத்திய வீரம் செறிந்த போர் இது. எனினும் இந்தப் போர் வடஇந்தியாவில் அதுவும் குறிப்பாக மத்திய மாகாணத்தில் (இன்றைய உத்திரப்பிரதேசம்) நடைபெற்றது. தென்னிந்தியாவில் இதன் தாக்கம் அறவே இல்லை.**

**● சேயன் இப்ராகிம்**

எனினும் சிப்பாய்க் கலகத்திற்கு முன்னரே கி.பி. 1806 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் வேலூரில் சிப்பாய்கள் அரசிற்கு எதிராகப் போரிட்டனர். இந்தப் போருக்கு சிற்றரசர்களோ குறுநில மன்னர்களோ ஆதரவு தெரிவிக்க வில்லை. முழுக்க முழுக்க சிப்பாய்கள் நடத்திய புரட்சி இது. 1857ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்க் கலகம் பல மாதங்கள் நீடித்தது. ஆனால் வேலூர் புரட்சி 8 மணி நேரத்திற்குள் முடிவடைந்தது.

மைசூர் வேங்கை திப்பு சுல்தான் வீர மரணம் எய்திய பிறகு அவரது மகன்களும், மகள்களும் பிற நெருங்கிய உறவினர்களும் வேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இந்தக் கோட்டையின் பாதுகாப்புப் பணிகளில் நூற்றுக்கணக்கான இந்தியச் சிப்பாய்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். திப்புவின் பிள்ளைகளும், உறவினர்களும் இந்தச் சிப்பாய்களோடு நல்லுறவு கொண்டிருந்தனர். அவர்களுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தி ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு எதிராகப் புரட்சி செய்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டனர். கோட்டையிலிருந்த திப்புவின் புதல்வர்களான முஹ்யித்தீனும், மொய்சுத்தீனும் இந்த முயற்சிகளில் முன்னணியில் இருந்தனர்.

கோட்டைக் காவல் பணியிலிருந்த இந்தியச் சிப்பாய்கள் பெரும் அதிருப்தியில் இருந்தனர். அவர்களுக்கு சுபேதார் பதவிக்கு மேல் எந்தவிதமான பதவி உயர்வும் வழங்கப் படவில்லை. ஒன்றிரண்டு பதவி உயர்வு பெற்ற சுபேதார் களையும் ஆங்கிலேய அதிகாரிகள் மதிப்பதில்லை. சிப்பாய்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்திலும் பெருத்த வேறுபாடு இருந்தது. இந்தியச் சிப்பாய்களை விடவும் ஹைதராபாத் நிஜாம் படைப் பிரிவிலிருந்த சுபேதார்கள் அதிக ஊதியம் பெற்றனர். இந்தியச் சிப்பாய்களிட மிருந்த இந்த அதிருப்தியை ஆங்கிலேய ஆட்சியினருக்கு எதிராகத் திருப்பி விட திப்புவின் புதல்வர்கள் முனைந் தனர்.

இந்நிலையில் 1805ஆம் ஆண்டு மெட்ராஸ் ரெஜி மெண்டின் இராணுவத் தளபதியாகப் பொறுப்புக்கு வந்த சர் ஜான் கிராடோக் என்பவன் அந்த ரெஜிமெண்டின் இராணுவ நடைமுறைகள் சீராக இல்லை என்று கருதி சில புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தினான். இந்தப் புதிய நடைமுறைகள் பின்வருமாறு :

1. சிப்பாய்கள் அனைவரும் வட்ட வடிவலான தொப்பியை அணிய வேண்டும் (இந்த வட்ட வடிவிலான

தொப்பி கிறித்தவர்கள் அணிகின்ற தொப்பியைப் போல் இருந்தது)

2. சிப்பாய்கள் நன்றாக முகச் சவரம் செய்து கொள்ள வேண்டும். தாடி வைத்துக் கொள்ளக் கூடாது. மீசை வைத்துக் கொள்ள விரும்பினால் அது ஓர் அளவிற்கு மேல் இருக்கக் கூடாது. நெற்றியில் திருநீரோ, காதுகளில் கடுக்கன்களோ அணியக் கூடாது.

மேற்கண்ட இந்தப் புதிய விதிமுறைகள் தங்களது மத நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் புண்படுத்துவதாக இருக்கின்றன என இந்து - முஸ்லிம் சிப்பாய்கள் அனைவரும் கருதினர். இந்தப் புதிய விதிமுறைகளைப் பின்பற்ற மாட்டோம் என சிப்பாய்கள் அறிவித்தனர். காலை நேர அணிவகுப்பின் போது, தொப்பிக்குப் பதிலாகக் கைக்குட்டையைத் தங்களது தலையில் கட்டிக் கொண்டனர். இந்தச் செயல் ஆங்கிலேய அதிகாரிகளை எரிச்சல் அடையச் செய்தது. புதிய தொப்பியை அணிய மறுப்பவர்கள் சிறையில் அடைக்கப் படுவார்கள் என அதிகாரிகள் எச்சரித்தனர். இதனையும் சிப்பாய்கள் பொருட்படுத்த வில்லை.

தொப்பி அணிய மறுத்த சிப்பாய்களைக் கைது செய்து விசாரணைக்காக மெட்ராஸுக்குக் கொண்டு சென்றனர். விசாரணையின் முடிவில் ஓர் இந்து ஹவில்தாருக்கும் முஸ்லிம் ஹவில்தாருக்கும் கசையடிகள் கொடுக்கப்பட்டன. கீழ்ப்படிந்து நடப்பேன் என உறுதிமொழிகள் கொடுத்த சிப்பாய்கள் மட்டும் வேலையில் சேர அனுமதிக்கப்பட்டனர். உறுதிமொழி கொடுக்க மறுத்தவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இது இந்திய சிப்பாய்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

வாலாஜாபாத்திலும் இந்தத் தொப்பிப் பிரச்னை ஏற்பட்டது. புதிய தொப்பிகளை அணிய மறுத்த சிப்பாய்கள் அவற்றைக் கீழே எறிந்து விட்டு ஆங்கிலேய அதிகாரிகளைத் திட்டினர். வெங்கட நாயர் என்ற சுபேதார் தான் சிப்பாய்களைத் தூண்டி விடுகிறார் எனக் கருதிய அதிகாரிகள் அவரைக் கைது செய்து விசாரணைக்காக மெட்ராஸுக்கு அழைத்துச் சென்றனர். இதுபோன்ற அடக்குமுறை நடவடிக்கைகளினால் சிப்பாய்கள் கொதிப்படைந்தனர்.



**இந்தப் புதிய விதிமுறைகளைப் பின்பற்ற மாட்டோம் என சிப்பாய்கள் அறிவித்தனர். காலை நேர அணிவகுப்பின் போது, தொப்பிக்குப் பதிலாகக் கைக்குட்டையைத் தங்களது தலையில் கட்டிக் கொண்டனர். இந்தச் செயல் ஆங்கிலேய அதிகாரிகளை எரிச்சல் அடையச் செய்தது.**

இந்தச் சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்த வேண்டுமென்று கருதிய திப்புவின் புதல்வர்கள் ஆங்கிலேய அதிகாரிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யுமாறு இந்தியச் சிப்பாய்களைத் தூண்டினர். ஆலோசனைக்குப் பிறகு, திப்புவின் புதல்வர் மொய் சுத்தீன் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்குவார் என்றும், இந்திய அதிகாரிகள் சுபேதார் ஷேக் ஆதமும், ஜமேதார் ஷேக் ஹுஸைனும் அதனை வழிநடத்துவார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது.

எட்டு நாள்களுக்குள் கோட்டையைக் கைப்பற்றி விடலாம் என்றும், மேலும் 10,000 சிப்பாய்கள் நம்முடன் வந்து சேர்ந்து கொள்வார்கள் என்றும், தென்னிந்திய மக்கள் இந்தக் கிளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு தருவார்கள் என்றும் இளவரசர் மொய்சுத்தீன் சிப்பாய்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

17.07.1806 அன்று கிளர்ச்சியைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் முஸ்தபா பேக் என்ற கருங்காலி இந்த விஷயத்தை லெப்டினன்ட் கர்னல் போர்ப்பிலாலிடம் தெரிவித்து விட்டான். எனவே அவன் உடனடியாக விசாரணை மேற்கொண்டான். ஆனால் இந்திய சிப்பாய்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அப்படி ஒரு திட்டமும் இல்லை என உறுதிபட அவனிடம் தெரிவித்தனர். இதனை அவன் நம்பிவிட்டான்.

இந்நிலையில் இந்தியச் சிப்பாய்கள் ஏற்கனவே 17.07.1806 அன்று கிளர்ச்சியைத் தொடங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்ததற்கு மாறாக 10.07.1806 அன்றே தொடங்கி விட்டனர். அன்றைய தினம் கோட்டையில் 1800 இந்தியச் சிப்பாய்களும் 350 ஆங்கிலேய அதிகாரிகளும் சிப்பாய்களும் இருந்தனர். ஆங்கிலேய அதிகாரிகள் வழக்கமான மேற்பார்வைப் பணிகளை முடித்துவிட்டு உறங்கச் சென்றனர். இதுதான் தக்க தருணம் என இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒன்றுகூடி இரவு 2 மணிக்கு முதல் வேலையாக ஆயுதக் கிடங்கின் பூட்டை உடைத்து போதிய அளவிற்குத் துப்பாக்கிகளையும் கத்திகளையும் எடுத்துக் கொண்டனர். அடுத்து கோட்டையின் வாயிலைக் காவல் காத்துக் கொண்டிருந்த ஆங்கிலேயச் சிப்பாய்களைச் சரமாரியாகச் சுட்டு வீழ்த்தி அதனைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். பின்னர் ஆங்கிலேய அதிகாரிகளும், சிப்பாய்களும் வசித்து வந்த குடியிருப்புகளைச் சுற்றி வளைத்து தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலை முற்றிலும் எதிர்பாராத ஆங்கிலேய அதிகாரிகள் சுதாரித்துக் கொண்டு எழுந்து வந்து எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

ஆங்கிலேய அதிகாரிகளும், சிப்பாய்களும் வசித்து வந்த குடியிருப்புகளைச் சுற்றி வளைத்து தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலை முற்றிலும் எதிர்பாராத ஆங்கிலேய அதிகாரிகள் சுதாரித்துக் கொண்டு எழுந்து வந்து எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

எனினும் சிப்பாய்களின் கையே ஓங்கியது. 69ஆவது படைப்பிரிவைச் சார்ந்த ஆங்கிலேய அதிகாரிகளில் பாதிப்பேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர். கோட்டைக் காவல் பிரிவின் ஆணை அதிகாரி லெப்டினன்ட் கர்னல் பான் கோர்ட்டும், 23ஆவது படைப் பிரிவின் லெப்டினன்ட் கர்னல் கொராஸ்ஸும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயர்களின் வீடுகளைத் தாக்கி அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையடித்தனர். எனினும் பெண்களையும், குழந்தைகளையும் தாக்காமல் விட்டு விட்டனர்.

கோட்டை முழுவதும் இந்தியச் சிப்பாய்கள் வசம் வந்தது. கோட்டையின் மேலிருந்த ஆங்கிலேயக் கொடி இறக்கப்பட்டு திப்புவின் கொடி ஏற்றப்பட்டது. இந்திய சிப்பாய்கள் வெற்றி! வெற்றி!!

எனக் கூத்தாடினர். சிப்பாய்களில் ஒரு பிரிவினர் கட்டுப்பாட்டினை இழந்து கோட்டையிலிருந்த கருவூலத்தைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்தியவர்களால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த சிப்பாய்களின் செயல் கிளர்ச்சியின் நோக்கத்தையே சீர்குலைப்பதாக அமைந்தது.

சிப்பாய்களின் கிளர்ச்சி குறித்த தகவல்கள் ஆற்காடு இராணுவத் தலைமையகத்திற்கு அதிகாலை ஆறு மணியளவில் தான் கிடைத்தன. அங்கே பொறுப்பிலிருந்த அதிகாரி சர் ராபர்ட் ரோலோ கில்லஸ்பி தனது 19ஆவது படைப் பிரிவைத் திரட்டிக் கொண்டு கோட்டைக்கு விரைந்து வந்தான். அப்போது அந்தக் குழப்பம் நீடித்துக் கொண்டிருந்தது. இந்திய சிப்பாய்கள் கொள்ளையடிப்பதிலும், கொள்ளையடித்த பொருள்களைப் பங்கிடுவதிலும், அவறைத் தூக்கிக் கொண்டு கோட்டைக்கு வெளியே ஓடுவதுமாக இருந்தனர். கோட்டைவாயில்கள் திறந்தே இருந்தன.

எனவே கில்லஸ்பி தலைமையிலான ஆங்கிலேயப் படையினர் எந்தவிதமான சிரமுமின்றிக் கோட்டைக்குள் நுழைந்தனர். நுழையும் போது எதிரே தென்பட்ட இந்திய சிப்பாய்களைச் சுட்டுக் கொண்டே சென்றனர். கோட்டையின் உச்சியில் பதுங்கியிருந்த ஆங்கிலேயச் சிப்பாய்களை கயிறு மூலம் கீழ்ப்பகுதிக்குக் கொண்டு சேர்த்த கில்லஸ்பி மூர்க்கமாகத் தாக்குதல் நடத்தினான்.

சிறிது நேரத்தில் ஆற்காட்டிலிருந்து ஆங்கிலேய குதிரைப் படையின் ஒரு பிரிவும் வந்து சேர்ந்தது. இரு தரப்பிற்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டது. எனினும் இறுதியில் ஆங்கிலேயப் படையின் கையே ஓங்கியது. காலை 10 மணிக்குள் இந்தியச் சிப்பாய்களின் கிளர்ச்சி அடக்கப்பட்டது. கிளர்ச்சியின் போது 800 இந்தியச் சிப்பாய்களும் 350 ஆங்கிலேய அதிகாரிகள், சிப்பாய்களும் கொல்லப்பட்டிருந்தனர். 10.7.1806 காலை 2 மணிக்குத் தொடங்கிய கிளர்ச்சி காலை 10 மணிக்குள் அதாவது எட்டு மணி நேரத்தில் அடக்கப்பட்டது.

கிளர்ச்சி அடக்கப்பட்ட பிறகு கோட்டைக்குள் இருந்த திப்புவின் புதல்வர்களைக் கொல்வதற்காக ஆங்கிலேயப் படையின் ஒரு பிரிவினர் முயன்றனர். ஆனால் கோட்டையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேய அதிகாரி கர்னல் மரியாத் வேண்டிக் கொண்டதன் பேரில் அவர்கள் திப்புவின் புதல்வர்களை உயிரோடு விட்டுச் சென்றனர். பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு கல்கத்தா கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் சிறையிலேயே இயற்கை மரணம் எய்தினர். தற்போது திப்புவின் ஏழாவது, எட்டாவது தலைமுறையினர் கல்கத்தாவிலேயே மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ற ஒரு பழமொழி உண்டு. திப்புவின் புதல்வர்களும் புலிகளாகத் திகழ்ந்தனர். கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த போது ஆங்கிலேயர்களை ஒழிக்க திட்டம் தீட்டிக் கொண்டே இருந்தனர். பல்வேறு பிரச்னைகள் காரணமாக அதிருப்தியிலிருந்த இந்தியச் சிப்பாய்களைத் தூண்டி ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சி தோல்வியுற்றது. எனினும் இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக்கு எதிராக நடத்திய முதல் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இது வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கது.

**குறிப்பு : 21.06.2019 அன்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற வரலாற்றில் வாழ்பவர்கள் என்ற நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் திப்புவின் வாரிசு ஒருவரை அழைத்து வந்து அவருக்கு பொன்னாடை அணிவித்து ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் வழங்கினர். முன்னதாக அவரை ஒரு மாமன்னர் போல் உடை அணியச் செய்து ஊர்வலமாக அழைத்து வந்தனர். இந்தச் சிறப்பான நிகழ்வில் நான் கலந்து கொண்டேன்.**

# ஒழுக்க விழிப்பு உணர்வு காலத்தின் கட்டாயம்!

- மௌலவி **முஹம்மத் ஹனீஃபா** மன்பயீ
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த், மாநிலத் தலைவர்

*2026 ஜூலை 16 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் சென்னை ஜமாலியா IIC அரங்கத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தின் அறிக்கை*

### ஊழலை விரட்டி அடிப்பதற்கு ஒரே வழி..!

ஊழல் நாளுக்கு நாள் வளர்ந்து பேருருவம் எடுத்திருப்பது கவலை அளிக்கின்றது. அமைச்சர்கள், மூத்த அரசு அதிகாரிகள், செல்வாக்கு மிக்க ஆளுமைகள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் நம்முடைய நாட்டில் அரசாட்சி, ஒழுக்கம், தார்மிகம் ஆகிய அனைத்தும் மிகப் பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்பதையே உணர்த்துகின்றன. எந்த ஒரு நிறுவனத்துக்கும் பதில் சொல்லும் பொறுப்பு உணர்வு என்பது இல்லையோ என்கிற அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கின்றது.

இப்போதெல்லாம் ஊழல் என்பது வெறுமனே அரசியல், அரசு நிர்வாகம், வணிகம் ஆகிய தளங்களில் மட்டுமே சுருங்கிக் கிடக்கவில்லை. கோடிக் கணக்கான சாமான்யர்களின் பக்தியையும் நம்பிக்கையையும் பெற்றிருக்கின்ற நிறுவனங்களைக் கூட ஊழலின் கொடிய நாக்குகள் தீண்டத் தொடங்கியிருக்கின்றன.

பதில் சொல்லும் பொறுப்பு உணர்வு, வெளிப்படைத்தன்மை, நெறிப்படுத்தும் கட்டமைப்பு ஆகியவற்றுக்கான நம்முடைய நிர்வாகக் கட்டமைப்பு எந்த அளவுக்குப் பலவீனமானவையாய், ஓட்டைகள் நிறைந்தவையாய் இருக்கின்றன என்பதைத்தாம் இந்த நிகழ்வுகள் அம்பலப்படுத்துகின்றன. அதற்கும் மேலாக நம்முடைய சமூகமே இன்னும் ஆழமான ஒழுக்க நெருக்கடிக்குள்ளாகி நிற்பதையும் இவை அம்பலப்படுத்துகின்றன.

எங்கேயும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நம்பிக்கைக்குப் பதிலாக சுயநலத்துக்கும், பொது மக்கள் சேவைக்குப் பதிலாக தனிப்பட்ட நலன்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற பேராசையும், உலக மோகமும், ஒழுக்கச் சீர்கேடுகளும், தார்மிக வெறுமையும் போட்டி போடுகின்ற அருவருப்பான கலாச்சாரம்தான் இவற்றுக்கெல்லாம் ஆணிவேராக இருக்கின்றது. சிஸ்டத்தைச் சீர்திருத்துகின்ற அதே வேளையில் மக்கள் மத்தியில் ஒழுக்க விழிப்பு உணர்வு மலர வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

நம்முடைய தனிப்பட்ட வாழ்வையும் பொது வாழ்வையும் வழிகாட்டி, நெறிப்படுத்துகிற கொள்கைகளாய் நேர்மை, வாய்மை, உண்மை, பதில் சொல்லும் பொறுப்பு உணர்வு, இறையச்சம் ஆகிய உன்னதக் கோட்பாடுகள் அமைந்தால்தான் பொது வாழ்வைத் தூய்மைப்படுத்த முடியும்.

### ஜனநாயக மாண்புகளுக்குச் சூழ்ந்துள்ள அச்சுறுத்தல்கள்..!

நம்முடைய நாட்டில் மக்களாட்சி மாண்புகளுக்கும் ஜனநாயக நெறிமுறைகளுக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நெருக்கடிகள் கவலை அளிக்கின்றது.

‘தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தலுக்குப் பிறகு அரங்கேறி வரும் சில விரும்பத்தகாத நிகழ்வுகளும், தமிழ்நாட்டில் மட்டுமின்றி மகாராஷ்டிரம், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் அரங்கேறி வரும் நிகழ்வுகளும் கவலையளிக்கின்றன.

உருட்டல், மிரட்டல்களால் அரங்கேறும் அணித் தாவல்கள்; கட்சித் தாவல்கள், தேர்தலுக்குப் பிந்தைய அரசியல் அணி மாற்றங்களைக் கொண்டு சட்டசபை பெரும்பான்மை பலத்தைத் திருத்துவதற்கு நடக்கின்ற முயற்சிகள், அரசியல் நிலைகுலைவு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் எதிர்க்கட்சி ஆர்வலர்களும் மிரட்டலுக்கும் அழுத்தத்துக்கும் ஆளாக்கப்படுகின்றார்கள் என்கிற குற்றச்சாட்டுகள் ஆகிய அனைத்தும் கவலையளிக்கின்றன.

தேர்தல்களில் மக்கள் அளிக்கின்ற தீர்ப்புகளை, தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு ஜனநாயக விரோதச் செயல்பாடுகளைக் கொண்டும், ஜனநாயக மாண்புகளுக்கு உலை வைக்கின்ற நடவடிக்கைகளைக் கொண்டும் எளிதாகத் திருத்திவிட முடியும் என்கிற எண்ணத்தைத்தான் இந்த நடப்புகள் தோற்றுவிக்கின்றன.




புலனாய்வுக்கான ஏஜென்சிகளையும், அமலாக்கத்துறை ஏஜென்சிகளையும் அரசியல் எதிரிகள் மீது பிரயோகிப்பதும், அதிலும் குறிப்பாக அரசியல் ரீதியான கொந்தளிப்பான காலகட்டங்களில் இவற்றைச் செய்வதும் மிகுந்த கவலை அளிக்கின்றன. பொது மக்கள் மத்தியிலும் பொதுத்தளங்களிலும் கருத்துகளை எடுத்துரைக்கின்ற சந்தர்ப்பங்களில் பேச்சின் தரமும் உரையின் கண்ணியமும் வெகுவாகத் தாழ்ந்து வருவதும் கவலையளிக்கின்ற போக்கு ஆகும்.

அறிவார்ந்த உரையாடலும், கருத்தார்ந்த விவாதங்களும் வெகுவேகமாக காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. தனிமனிதத் தாக்குதல்களும், வெறுப்புப் பேச்சும், அரசியல் எதிரிகள், பத்திரிகையாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியோரின் மானத்தையும் கண்ணியத்தையும் சுக்குநூறாக உடைத்தெறிகின்ற வகையிலான சொல்லாடல்களும், அணி திரட்டுகின்ற போக்கும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன.

ஜனநாயகப் பூர்வமான முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் ஆரோக்கியமான குடியரசுக்கு இன்றியமையாதவையாகும். ஆனால் பகையையும் சகிப்பின்மையையும் இயல்பானவையாய் அங்கீகரிக்கின்ற போக்கு கலந்துரையாடுகின்ற பண்பாட்டைப் பலவீனப்படுத்தி விடுகின்றது; அதற்கும் மேலாக சமூகத்தில் பிளவுகளைக் கூர்மைப்படுத்தி விடுகின்றது.

இந்த நிலையில் நம்முடைய நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பேணி நடக்கின்ற போக்கையும், ஜனநாயக மாண்புகளையும், சட்டத்தின் ஆட்சியையும் மேற்கொள்வதன் பக்கம் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அரசியல் அமைப்புச் சட்டப் பூர்வமான அதிகாரிகளுக்கும், பொது நிறுவனங்களுக்கும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அழைப்பு விடுக்கின்றது.

அரசாட்சியாகட்டும், அரசியல் நடத்தை ஆகட்டும் எல்லாமே நீதி, பதில் சொல்லும் பொறுப்பு உணர்வு, பன்மைச் சமூக மாண்புகள், பன்மையைக் கொண்டாடும் போக்கு, அரசியல் அமைப்புச் சட்ட மாண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குபவையாக இருந்தால் மட்டுமே இந்திய ஜனநாயகம் வலுவாக இருக்கும்.

## இஸ்லாத்தைத் தழுவிய முஸ்லிம்களுக்கான BCM இடஒதுக்கீடு: சமூக நீதியையும் மதச்சுதந்திரத்தையும் காக்க வேண்டும்

இஸ்லாத்தைத் தழுவிய இஸ்லாமியர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை வழங்க முடியாது என சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறது. அதேவேளையில், இவ்வழக்கில் மாநில அரசின் தரப்பில் ஏற்பட்ட அலட்சியங்களே இந்நிலைக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டை அரசு சுயபரிசோதனை செய்து உச்சநீதிமன்றத்தில் உறுதியான சட்ட வாதங்களை முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இடஒதுக்கீடு என்பது வறுமை ஒழிப்புத் திட்டமல்ல. வரலாற்று ரீதியாக சமூக, கல்வி அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் அரசமைப்புச் சட்ட வழிமுறையாகும். ஒருவர் மதம் மாறுவதால் மட்டும் அவரது பின்தங்கிய நிலை ஒரே நாளில் மாறிவிடாது. மதம் மாறுவோருக்கு அவர் எந்த மதத்துக்கு மாறுகிறாரோ அதற்கான இடஒதுக்கீட்டை மறுப்பது சமூக நீதி சார்ந்த உரிமைகளை மறுப்பது ஆகும்.

**இஸ்லாத்தைத் தழுவும் ஒருவரை முஸ்லிம் சமூகம் முழுமையான உறுப்பினராக ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவரது சமூகப் பின்னடைவையும் புறக்கணித்து சட்டப் பாதுகாப்பை அவருக்கு மறுப்பது சமூக நீதிக்கும் சமத்துவத்திற்கும் முரணான அணுகுமுறையாகும்.**

இந்திய அரசமைப்புச் சட்டம் மத அடிப்படையில் உரிமைகளை வழங்குவதில்லை. மத அடையாளத்தைக் கொண்டு இடஒதுக்கீடு வழங்குவதை அது அங்கீகரிக்கவில்லை. மாறாக சாதிய அடிப்படையை மட்டுமே அது ஏற்கிறது. இதுவே சிக்கலானது. ஏனெனில் இந்திய முஸ்லிம்களின் சமூக அமைப்பு இந்து சாதிய அமைப்பின் பிரதிபலிப்பு அல்ல.

ராவுத்தர், லப்பை, மரைக்காயர் போன்ற சமூக அடையாளங்கள் இந்து வர்ண சாதி அமைப்பு போன்றவை அல்ல. இதனால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின் சாதி அடிப்படையிலான அணுகுமுறைக்குள் கொண்டு வருவதே சிக்கலானதுதான். இந்தச் சூழலில் 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட BCM உள் இடஒதுக்கீடு, சட்டக் கட்டமைப்பிற்குள் இருந்து சமூகநீதியை உறுதிப்படுத்த முயன்ற ஒரு நடைமுறைத் தீர்வாகும்.

அதேபோல் 2024ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணை மூலம் பட்டியலினத்தோர், பிற்படுத்தப்பட்டோர் இஸ்லாத்தைத் தழுவினாலும் BCM சான்றிதழ் பெறும் வழிவகை செய்யப்பட்டிருந்தது. இதன் அடிப்படை நோக்கம் மதம் மாறியதால் சமூகப் பின்னடைவு மறைந்துவிடாது என்ற சமூக யதார்த்தத்தை அங்கீகரிப்பதே ஆகும்.

இஸ்லாம் கோட்பாட்டு ரீதியாக சாதிய வேறுபாடுகளை முற்றாக நிராகரித்து மனித சமத்துவத்தை வலியுறுத்துகிறது. இஸ்லாத்தைத் தழுவும் ஒருவரை முஸ்லிம் சமூகம் முழுமையான உறுப்பினராக ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவரது சமூகப் பின்னடைவையும் புறக்கணித்து சட்டப் பாதுகாப்பை அவருக்கு மறுப்பது சமூக நீதிக்கும் சமத்துவத்திற்கும் முரணான அணுகுமுறையாகும்.

மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் தீர்ப்பு நடைமுறையில் மதமாற்றத்தைத் தடுக்கும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும்,

மதம் மாறியவர்களை சமூகநல உரிமைகளிலிருந்து விலக்கி தண்டிக்கும் நிலையை உருவாக்கக் கூடியதாகவும் இருக்கிறது. இது இந்திய அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள மதச் சுதந்திரத்துக்கு எதிரானதாகும்.

எனவே உச்சநீதிமன்றம் இவ்விவகாரத்தை சமூகநீதி, மதச்சுதந்திரம், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றின் ஒளியில் மறுபரிசீலனை செய்து மதமாற்றம் காரணமாக எந்தக் குடிமகனும் தனது நியாயமான சமூக உரிமைகளை இழக்கக் கூடாது என்ற கொள்கையை நிலைநாட்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

**தனிமனிதத் தாக்குதல்களும், வெறுப்புப் பேச்சும், அரசியல் எதிரிகள், பத்திரிகையாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியோரின் மானத்தையும் கண்ணியத்தையும் சுக்குநூறாக உடைத்தெறிகின்ற வகையிலான சொல்லாடல்களும், அணி திரட்டுகின்ற போக்கும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன.**

### *மது, போதை இல்லாத தமிழ்நாடு மலர..!*

தமிழ்நாடு அரசு கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், பள்ளிக்கூடங்கள், கல்வி நிறுவனங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த 717 டாஸ்மாக் சாராயக் கடைகளை அதிரடியாக மூட உத்தரவிட்டது வரவேற்கத் தக்கதாகும். அதே சமயம் இவ்வாறு மூடப்பட்ட கடைகள் வேறு வகையில் அருகில் இருக்கின்ற சந்துகளில் முளைக்க அனுமதிக்கக்கூடாது என்பதிலும் தமிழ்நாடு அரசு கவனமாக இருக்க வேண்டும்.

குடும்பச் சீரழிவு, சாலை விபத்துக்கள், குற்றங்கள், பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்கள், வன்முறைகள் என எல்லாவற்றுக்கும் முக்கியக் காரணமாக இருப்பது மதுப் பழக்கமே. மதுவிலிருந்து மாநிலத்தையும் மக்களையும் மீட்டெடுப்பதில் தமிழ்நாடு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அரசுப் பணிகளில் இருக்கின்ற மதுப் பிரியர்களுக்கு குடிப்பழக்கம் இல்லாத மற்றவர்களுக்குத் தரப்படுகின்ற பொதுவான சலுகைகள் எதுவும் வழங்கப்படக் கூடாது.

கஞ்சா போன்ற போதைப் பொருள்களின் புழக்கத்தை முற்றாகத் தடுத்து நிறுத்த வேண்டும். கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதோடு நின்றுவிடாமல் ஆணிவேராக இருக்கின்றவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மது, போதைப் பழக்கங்களுக்கு எதிராக தமிழ்நாடு எங்கும் தொடர் பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும். சுவரெழுத்து முதல் நாளிதழ்களில் விளம்பரம் வரை, குறும்படம் முதல் திரைப்படங்கள் வரை, காணொளிகள், ரீல்கள் முதல் மீம்கள் வரை எந்நேரமும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா இடங்களிலும் மது, போதைப் பொருள்களுக்கு எதிரான பரப்புரைச் செய்தியோ, வாசகமோ மக்களின் பார்வையிலும் செவிகளிலும் விழுந்து கொண்டே இருக்கின்ற வகையில் முழுவீச்சில் இந்தப் பரப்புரை இருத்தல் வேண்டும்.

மது, போதைப் பொருள்களின் வாடையைக் கூட நுகராத தலைமுறை ஒன்றை வார்த்தெடுப்பதை இலக்காகக் கொண்டு இந்தப் பரப்புரை ஆண்டு முழுவதும் முழுவீச்சில் நடத்தப்பட வேண்டும்.

# அவர் உங்களை எச்சரிப்பவரே!

இவர்களுக்கு நம்முடைய தெளிவான வசனங்கள் ஓதிக்காட்டப்படும்போது இவர்கள் கூறுகின்றார்கள். 'இந்த மனிதர் விரும்புவதெல்லாம் உங்களுடைய முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வங்களை விட்டு உங்களைத் தடுத்துவிடுவதுதான்.' மேலும், கூறு கின்றார்கள்: '(குர்ஆன்) புனைந்துரைக்கப்பட்ட வெறும் பொய்யே தவிர வேறில்லை.' இந் நிராகரிப்பாளர்களின் முன்னால் சத்தியம் வந்த போது அவர்கள் கூறினார்கள்: 'இதுவோ வெளிப்படையான சூனியம்!'

நாம் இந்த மக்களுக்கு இவர்கள் படிக்கக்கூடிய வகையில் எந்த வேதத்தையும் முன்னர் வழங்கவில்லை. மேலும் உமக்கு முன்பு எச்சரிக்கை செய்பவர் எவரையும் இவர்களிடம் நாம் அனுப்பவும் இல்லை.[64] இவர்களுக்கு முன் வாழ்ந்து சென்ற மக்களும் பொய்யென்று தூற்றியிருக்கின்றார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் பத்திலொரு பங்குகூட இவர்கள் பெறவில்லை. ஆனால் அவர்கள் என்னுடைய தூதர்களைப் பொய்யர்கள் எனத் தூற்றியபோது பாருங்கள்! என்னுடைய வேதனை எத்துணைக் கடுமையாக இருந்தது![65]

(நபியே! இவர்களிடம்) கூறும்: 'நான் உங்களுக்கு ஒரே ஒரு விஷயத்தை அறிவுறுத்து கின்றேன்: நீங்கள் அல்லாஹ்வுக்காக தனித் தனியாகவோ இருவரிருவராகவோ சேர்ந்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்; உங்களுடைய தோழரிடம் பைத்தியக்காரத்தனம் என்ன இருக்கின்றது என்று![66] அவரோ ஒரு கடினமான வேதனை வருமுன் உங்களை எச்சரிக்கை செய்பவர் மட்டுமே ஆவார்.'[67]

இவர்களிடம் கூறும்: 'நான் உங்களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. அவ்வாறு கேட்டிருந்தாலும் அதனை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.[68] என்னுடைய கூலி அல்லாஹ்வின் பொறுப்பிலேயே உள்ளது. அவன் அனைத்து விஷயங்களுக்கும் சாட்சியாக இருக்கின்றான்.'

**● அத்தியாயம் 34 ஸபா ● திருவசனங்கள் : 43-47**

**64.** அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை யும் வழிபட்டு, பூஜிக்க வேண்டும் எனப் போதித்துக் கொண்டு இதற்கு முன்பு எந்த வொரு இறைத்தூதரும் இவர்களிடம் வரவும் இல்லை; அது போன்ற போதனை யுடன் எந்தவொரு வேதமும் இவர்களிடம் அனுப்பப்படவும் இல்லை. எனவே குர்ஆனும் முஹம்மத் நபிகளாரும் விடுத்து வந்த ஏக இறைவனை மட்டுமே வழிபட வேண்டும் என்கிற ஏகத்துவ அழைப்பை இந்த மக்கள் எந்த ஓர் அறிவார்ந்த அடிப்படையிலும் நிராகரிக்கவில்லை. அதற்கு மாறாக முழுக்க முழுக்க அறியாமையின் அடிப்படையில்தான் நிராகரித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் தம் முடைய இந்த நடத்தைக்கு வலுச் சேர்க்கின்ற விதத்தில் இவர்களிடம் எத்தகைய சான்றும் இருக்கவில்லை.

**65.** இந்த மக்கத்து மக்களால் எட்டிக்கூட பார்க்க முடியாத அளவுக்கு அந்த முற்காலத்து மக்கள் செல்வச் செழிப்போடும் பொருள் வளத்தோடும் பெரும் வலிமையோடும் சிறப்போடும் வாழ்ந்து சென்றார்கள்; இன்னும் சொல்லப் போனால் அவர்களின் அந்தச் செழிப்பு, சக்தி, வலிமை ஆகியவற்றில் இம்மி அளவுகூட இந்த மக்கத்து மக்கள்

28 ஆம் பக்கம் பார்க்க...

● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : T. அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்

# இரவுத் தொழுகையின் சிறப்புகள்

**நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் அவசியம் இரவில் விழித்தெழுந்து தொழுங்கள். ஏனெனில் இது உங்களுக்கு முந்தைய காலத்து உத்தமர்களின் வழிமுறையாகவும் அடையாள மாகவும் இருக்கின்றது. மேலும் இதுதான் உங்களின் அதிபதியின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிவகையாகவும் இருக்கின்றது. மேலும் பாவங்களின் (பாதிப்புகளை) அழித்துவிடக் கூடிய தாகவும் பாவச் செயல்களில் விழுவதிலிருந்து தடுக்கக்கூடியதாகவும் இருக்கின்றது'.**

அறிவிப்பாளர் : அபூஉமாமா(ரலி) நூல் : திர்மிதி

இந்த நபிமொழியில் தஹஜ்ஜுத் தொழுகையின் அருள்வளங்கள், சிறப்புகள் குறித்து அழகாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை என்னவெனில் அதனை வாய்மை யான உள்ளத்துடனும் எண்ணத் தூய்மையுடனும் நிறைவேற்ற வேண்டும். மேலும் அதற்கான ஒழுங்குமுறைகளைப் பேணி நடந்துகொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

தஹஜ்ஜுத் தொழுகைக்கான நேரமே மனத்துக்கு நிம்மதியளிப்பதாய், அமைதியும் நிசப்தமும் நிறைந்ததாய் இருக்கின்றது. மேலும் இறைவனுக்கு முன்னால் சிரம் பணிந்து தொழ வேண்டும், அவனிடம் மன்றாட வேண்டும் என்கிற ஒற்றை நோக்கத்துடன் தூக்கத்தை உதறிவிட்டு, படுக் கையைத் துறந்து விட்டு எழுந்து நிற்கின்ற போது அளப்பரிய மனஓர்மையும் ஈடுபாடும் கிடைக்கின்றது. மனம் இம்மியளவு கூட இங்குமங்கும் அலைபாய்வதில்லை. மனம் இலயித்து வழிபாட்டின் சுவையை ருசிக்கின்ற நற்பேறு கிடைக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் பயிற்சிக்கான அற்புதமான வழியாகவும் அது இருக்கின்றது.

'உண்மையில், இரவில் எழுந்திருப்பது மனதைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ள தாகவும் (குர்ஆனை) நேர்த்தியாக ஓதுவதற்கு மிகவும் ஏற்றதாகவும் இருக்கின்றது' (73:6) என்றே குர்ஆன் அறிவிக்கின்றது.

நபிகளாரை விளித்துச் சொல்லப்பட்டது: 'இரவில் தஹஜ்ஜுத் தொழுகையைக் கடைப்பிடியும். இது நீர் செய்ய வேண்டிய அதிகப்படியான தொழுகையாகும். உம் இறைவன் உம்மை 'மகாமே மஹ்மூத்' எனும் அந்தஸ்துக்கு உயர்த்தலாம்.' (திருக்குர்ஆன் 17:79)

அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான நோன்பு தாவூத்(அலை) அவர்களின் நோன்பாகும் என்றே நபிமொழிகளில் சொல்லப்பட்டுள்ளது. தாவூத் நபி அவர்கள் ஆண்டில் பாதி நாள்கள் நோன்பு நோற்பார்கள். அதாவது ஒரு நாள் நோன்பு நோற்பார்கள். அடுத்த நாள் நோன்பு நோற்க மாட்டார்கள். தொழுகைகளிலும் தாவூத்(அலை) அவர்களின் தொழுகைதான் அல்லாஹ்வுக்கு விருப்பமானதாகும். அவர்கள் பாதி இரவு வரை உறங்குவார்கள். பிறகு எழுந்து தொழுதுவிட்டு மீண்டும் உறங்குவார்கள். நள்ளிரவில் விழித்தெழுகின்ற போது இரவின் மூன்றிலொரு பகுதி வரை தொழுது கொண்டிருப்பார்கள் என்றும் நபிமொழிகளில் (முஸ்லிம் 2145) சொல்லப் பட்டுள்ளது.

'உங்களில் ஒருவர் இரவில் தொழுவதற்காக நின்றால் முதலில் சுருக்கமாக இரண்டு ரக்அத்கள் தொழட்டும்' என்றே நபிமொழிகளில் சொல்லப்பட்டுள்ளது. (முஸ்லிம் 1415). இதன் மூலமாக சோம்பல் அகன்றுவிடும். அதன் பிறகு அவர் புத்துணர்வுடன் நீண்ட ரக்அத்களைத் தொழுவது எளிதாகிவிடும். மற்றுமோர் நபிமொழியில் 'உங்களில் எவரேனும் ஒருவர் இரவில் விழித்தெழுந்திருக்க, ஆனால் தூக்க மிகுதியால் குர்ஆனைத் தெளிவாக ஓத முடியாமல் போனால், தாம் எதை ஓதுகின்றோம் என்பது பற்றிய உணர்வும் அவருக்கு இல்லாமல் போனால் அவர் படுத்துக்கொள்ளட்டும்' என்றும் சொல்லப்பட்டுள்ளது.

நபிமொழி விளக்கம் ✦ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ✦ தமிழில் : அபூ ஹானியா

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வசமாகியிருக்கவில்லை. என்றாலும் இறைத் தூதர்கள் எடுத்துரைத்த சத்தியத்தையும் பேருண்மைகளையும் அந்த வலிமையான மக்கள் நிராகரித்ததும், அசத்தியத்தின் அடிப் படையில் தமக்கான வாழ்க்கைத் திட்டத்தை அமைத்துக் கொண்டதும் அவர்கள் எவ் வாறெல்லாம் முற்றாக அழித்தொழிக்கப் பட்டார்கள்! அவர்களின் செல்வமும் செல் வாக்கும் வளமும் வலிமையும் அவர்களுக்கு எந்தவிதத்திலும் உதவவில்லை என்பதைக் கண் திறந்து பாருங்கள்.

**66.** 'நேற்று வரை அறிவுக்கூர்மையும் விஷய ஞானமும் நிறைந்த மனிதராக நீங்கள் கொண்டாடி வந்த மனிதரை இன்று எந்த அடிப்படையில் பைத்தியக்காரர் என்று சாதிக்க விரும்புகின்றீர்கள்? என்னதான் காரணம்? கஅபா ஆலயத்தைக் கட்டு கின்ற வேளையில் ஹஜ்ருல் அஸ்வத் எனும் கருப்புக் கல்லைப் பொருத்துகின்ற விவ காரம் பேருருவம் எடுத்துவிட, குறைஷிக் கோத்திரத்தார்கள் அனைவருமே ஒருவர் மற்றவருடன் பிணங்கிக் கொண்டு நின்ற போது நீங்கள் எல்லோரும்தானே ஒருமன தாக முஹம்மத் நபிகளாரை உங்களின் விவகாரத்தைத் தீர்க்கக் கூடிய நீதிபதியாக நியமித்தீர்கள்? அவரும் அந்த விவகாரத்தை எத்துணை அழகாகவும் அர்த்தம் பொதிந்த விதத்திலும் தீர்த்து வைத்தார் எனில், அவர் அளித்த தீர்ப்பை நீங்கள் எல்லோருமே மன நிறைவோடு ஏற்றுக்கொள்ளத்தானே செய் தீர்கள்? இவ்வாறாக அவர் எத்துணை பெரும் அறிவாற்றலும் ஞானமும் பெற்றவர் என்பதை ஒட்டுமொத்த சமூகமே ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில் இப்போது என்ன நடந்து விட்டது என்பதற்காக அவரை பைத்தியக் காரர் என்று சாதிக்கத் துடிக்கின்றீர்கள்? பிடி வாதத்தால் ஒன்றை முற்றாக நிராகரிப்பது வேறு. ஆனால் நீங்கள் நாவால் சொல் கின்ற வாதத்தையும் பேச்சுகளையும் உங் களின் மனமும் ஒப்புக் கொள்கின்றதா? உண்மையான உள்ளத்தோடுதான் அந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துகின்றீர்களா' என்கிற விஷயத்தை ஆதாயங்கள், ஆசைகள், பக்கச் சார்புகள் ஆகிய அனைத்தையும் முற்றாக ஒதுக்கிவிட்டு இறைவனுக்காக மட்டுமே மனதை ஒருமுகப்படுத்தி உள்ளச்சத்தோடும் உளத்தூய்மையோடும் ஆய்ந்து பாருங்கள். ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் நல் லெண்ணத்தோடு சிந்தித்து சீர்தூக்கிப் பார்க் கட்டும். மேலும் இரண்டு இரண்டு பேராக, நான்கு நான்கு பேராக ஒன்று சேர்ந்து எந்தவிதமான தயக்கத்துக்கோ தடுமாற்றத் துக்கோ இடம் தராமல் ஒருவர் மற்றவருடன் விவாதித்து ஆய்ந்து பார்க்கட்டும்.

**67.** அவரைப் பைத்தியக்காரர் என்று குற்றம் சுமத்துவதற்கான காரணம் இது தானோ? நீங்கள் அழிவுப்பாதையில் செல்வ தைப் பார்த்து மனம் மகிழ்ந்து சபாஷ், சிறப் பாகச் செயல்படுகின்றீர்கள் என்று பாராட் டுபவர் தாம் உங்களில் அறிவாளியோ? நீங்கள் மோசமான கதிக்கு ஆளாவதற்கு முன்பே அது குறித்து உங்களை எச்சரிப் பவரும், குழப்பத்துக்குப் பதிலாக சீர்திருத் தத்தின் பக்கமும் நலத்தின் பக்கமும் உங்களுக்கு வழிகாட்டுபவரும் உங்களு டைய பார்வையில் பைத்தியக்காரரோ?

**68.** மூலத்தில் 'மா ஸஅல்துக்கும் மின் அஜ்ரின் ஃபஹுவ லக்கும்' என்கிற சொற்கள் ஆளப்பட்டுள்ளன. இதன் ஒரு பொருளை நாம் மேலே மொழிபெயர்ப்பில் எடுத்துரைத் திருக்கின்றோம். 'உங்களின் நலனைத் தவிர நான் வேறு எதையும் விரும்புவதில்லை. நீங்கள் திருந்திவிடுவதுதான் எனக்கான கூலியாகும்' என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். இதே கருத்து மகத்துவம் மிக்க குர்ஆனில் வேறொரு இடத்தில் பின்வரு மாறு சொல்லப்பட்டுள்ளது:

இவர்களிடம் கூறிவிடும்: 'இப்பணிக்காக உங்களிடம் நான் கூலி எதுவும் கேட்கவில்லை. எனது கூலியோ, எவர் தன் இறைவன் பக்கம் சென்றடைவதற்கான வழியினை மேற் கொள்ள விரும்புகின்றாரோ அவர் இதனை மேற்கொள்வதுதான்! (திருக்குர்ஆன் 25:57)

*(தொடரும்)*

# இந்தியாவில் பொது சிவில் சட்டம்

## ஏன் நடைமுறைக்கு ஏற்றதல்ல?

**டாக்டர் மசிஹுர் ரஹ்மான்**
ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்
மேற்கு வங்கத் தலைவர்

தமிழில் : **எஸ்.ஜவேரியா**



**மேற்கு வங்க அரசு பொது சிவில் சட்டத்தை (UCC) கொண்டு வரும் நோக்கில் ஒரு சட்ட முன் வடிவை மாநில சட்டப் பேரவையில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதற்காக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் ஒரு குழுவை மாநில அமைச்சரவை அமைத்துள்ளது. இந்தக் குழு உத்தரகாண்ட், அசாம், குஜராத் ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட்ட குழுக்களைப் போலவே செயல்படும். இக்குழுவின் முக்கியப் பணி என்னவென்றால் UCC மசோதாவை ஆய்வு செய்து தனது பரிந்துரைகளை வழங்கும்.**

ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஏற்கனவே உத்தரகாண்ட், அசாம், குஜராத் மாநிலங்களிலும் இதே பணியைச் செய்துள்ளார். இப்போது மேற்கு வங்க அரசும் அவரையே தலைவராக நியமித்துள்ளது. எனவே இந்தச் சட்டம் எந்த வகையில் அமையக்கூடும் என்பதை முன்கூட்டியே ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது.

அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் (AIMPLB) இப்பொழுது மட்டுமில்லாமல் 1970களின் தொடக்கத்திலிருந்தே UCCக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அப்போது நாடு முழுவதும் UCC குறித்து விவாதம் முதன்முதலாக தீவிரமடைந்த காலகட்டத்தில்தான் மும்பையில் நடந்த ஒரு மாநாட்டில் இந்த வாரியம் உருவாக்கப்பட்டது. அப்பொழுது இந்த வாரியத்தில் இந்தியாவின் பல முக்கிய மத சமூக பண்பாட்டு அமைப்புகள் இணைந்தன.

1985-86ஆம் ஆண்டுகளில் ஷா பானு வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியது. நாடு முழுவதும் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்(CPC) பிரிவு 125இன் கீழ் அந்தத் தீர்ப்பின் படி, விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்ணுக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது. இதற்கு முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் சட்டப்பூர்வமாகவும் ஜனநாயக

முறையிலும் அந்தத் தீர்ப்புக்கு எதிராக ஒரு போராட்டத்தை முன்னெடுத்தது. இந்த விவகாரம் நாடு முழுவதும் தீவிரமான விவாதத்திற்கு வழிவகுத்தது.

இந்த விவாதத்தில் பல அரசியல் கட்சிகள், மதச்சார்பற்ற சிந்தனையாளர்கள், பல்வேறு அமைப்புகள், இந்துத்துவ அமைப்புகளும் பங்கேற்று UCCக்கு ஆதரவு தெரிவித்தனர். அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சில பிரிவுகள், குறிப்பாக CPI(M) கூட UCCக்கு ஆதரவாக இருந்தனர்.

அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அரசு முடிவு எடுப்பதற்கு முன் பல தரப்பினருடன் ஆலோசனை நடத்தியது. முஸ்லிம் அறிஞர்களும், முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தின் தலைவர்களும் அன்றைய பிரதமரைச் சந்தித்து இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் குறித்து விளக்கினர்.

இதற்குப் பிறகு 1986ஆம் ஆண்டு ‘முஸ்லிம் பெண்கள்(விவாகரத்தின் போது உரிமைகள் பாதுகாப்பு)என்ற சட்டம்’ நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் சங் பரிவார் இந்த விவகாரத்தை ஒரு முக்கிய அரசியல் பிரச்னையாக எடுத்துக்கொண்டு தீவிரமாகப் பரப்புரை செய்தது. பாரதிய ஜனதா கட்சியும்(BJP) இதற்கு அரசியல் சாயம் பூச முயன்றது. அப்போது எல்.கே.அத்வானி, ‘முஸ்லிம் பெண்கள் மசோதா நிறைவேற்றப்பட்டதால் தான் ராம ஜன்மபூமி - பாபரி மஸ்ஜித் பிரச்னை மீண்டும் தீவிரமடைந்தது’ என்று கூறியதாக செய்திகள் வெளியாகின.

## சங் பரிவாரின் மூன்று முக்கிய அரசியல் இலக்குகள்

1. பொது சிவில் சட்டத்தை (UCC) அமல்படுத்துவது.
2. பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோயிலைக் கட்டுவது.
3. காஷ்மீருக்கான அரசியலமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவை நீக்குவது.

சங் பரிவார், ‘பண்பாட்டு தேசியவாதம்’ என்ற கொள்கையின் அடிப்படையில்தான் UCCக்கு ஆதரவு அளிக்கிறது. இந்தியாவின் பல்வேறு மதங்கள், மொழிகள், கலாச்சாரங்களைக் கொண்ட சமூகத்தை ஒரே பண்பாட்டு அமைப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே அதன் நோக்கம் என்று காட்டுகிறது.

இந்தியா ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பன்முகத்தன்மை, பல்வேறு கலாச்சாரங்களில் ஒற்றுமையுடன் இணைந்து வாழ்ந்து வரும் ஒரு நாகரிகமான நாடாக உள்ளது. சங் பரிவார் குறிப்பாக RSS இப்படிப்பட்ட பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை ஒரே மேலாதிக்க பண்பாட்டின் அடிப்படையில் மறுகட்டமைக்க முயல்கின்றது. இத்தகைய அணுகுமுறை ஒழுக்க ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. மேலும் நடைமுறைக்கு ஏற்றதாக மட்டுமல்லாமல், இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உயிர் நாடிக்கும் நீண்ட கால பாரம்பரியத்திற்கும் கலாச்சாரத்திற்கும் எதிரானது.

இந்துச் சமூகத்திற்குள்ளேயேகூட வாரிசு உரிமை தொடர்பாக ஒரே மாதிரியான சட்டம் இல்லை. தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் வெவ்வேறு சட்ட மரபுகள் பின்பற்றப்படுகின்றன. சிலர் மிதாக்ஷரா (Mitakshara) முறையையும், சிலர் தயாபாகா (Dayabhaga) முறையையும் பின்பற்றுகின்றனர். இதுவே இந்து தனியார் சட்டத்திற்குள்ளேயே பல்வேறு வேறுபாடுகள் இருப்பதைக் காட்டுகிறது.

கிறித்தவர்களுக்கும் அவர்களுக்கென தனிப்பட்ட சட்டங்கள் உள்ளன. சீக்கியர்களும் தங்களுக்கென தனியார் சட்டம் வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேபோல் ஆதிவாசி, பழங்குடியின மக்களுக்கும் அவர்களுடைய மரபுகள், பழக்கவழக்கங்கள் அனைத்தும் தனித்தனி சட்ட நடைமுறைகளாக உள்ளன.

அவர்கள் மீது எல்லாம் ஏன் UCC கட்டா யப்படுத்தப்படவில்லை. அதனைச் செய்ய BJPக்கும் விருப்பம் இருப்பதாகத் தெரிய வில்லை.

இந்த உண்மைகள் அனைத்தும் இந்தியாவின் பன்முகத்தன்மையை பெரும் பான்மையின் அதிகாரத்தால் அழிக்க முடியாது என்று தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. இந்த நிலையில் முஸ்லிம்களை மட்டுமே அதிகமாக UCC விவாதத்தில் முன்வைப்பது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

இந்திய சட்ட ஆணையமும்(Law Commission of India) இதுவரை UCCயை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்றோ கட்டாய அறிவுறுத்தலையோ வழங்கவில்லை. அப்படி இருக்கையில் அத்தகைய பரிந்துரை இல்லாமல் ஏன் UCCயைக் கொண்டு வர வேண்டும் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இது சட்ட ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும் கேட்கப்பட வேண்டிய நியாயமான கேள்வியாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25ஆவது பிரிவு ஒவ்வொரு குடிமகனுக்கும் தங்களது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தை அடிப்படை உரிமையாக உறுதி செய்கிறது. அதே நேரத்தில் 44ஆவது பிரிவு, அரசின் கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகளில் இடம்பெற்றுள்ளதால் அரசு எதிர்காலத்தில் UCCயை உருவாக்க முயற்சி செய்யலாம் என்று கூறுகிறது. ஆனால் அதை உடனடியாக அல்லது கட்டாயமாக அமல்படுத்த வேண்டும் என்று அது சொல்லவில்லை. வேறு வார்த் தைகளில் கூறினால், 44ஆவது பிரிவு கட்டாய மாக அமல்படுத்த வேண்டிய சட்டப்பிரிவு அல்ல.

இதனால் ஒரு முக்கியமான அரசியல மைப்புச் சட்டக் கேள்வி எழுகிறது. அடிப்படை உரிமைகளுக்கும் (Fundamental Rights), அரசின் கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் (Directive Principles of State Policy) இடையே முரண்பாடு ஏற்பட்டால் எதற்கு அதிக முக்கி யத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அரசியலமைப்புச் சட்ட விளக்கங்களின் (Constitutional Jurisprudence) அடிப்படையில், அடிப்படை உரிமைகளுக்கே அதிக பாதுகாப்பும் முன்னுரிமையும் வழங் கப்பட வேண்டும் என்று இந்திய அரசியல மைப்புச் சட்ட விளக்கங்கள் கூறுகின்றன.

பாஜக அரசு தொடர்ந்து ஒரே மாதிரியான சிவில் சட்டத்தை(UCC) கொண்டுவர முயற்சி செய்து வருகிறது. இதற்கிடையில் காங் கிரஸும் சரி பல்வேறு மாநிலங்களில் உள்ள கட்சிகளும் சரி மேலும் கம்யூனிஸ்ட் கட்சி களும் சரி அவர்களின் நிலைப்பாடு காலப் போக்கில் மாறியுள்ளன. இதனால் அவர்கள் UCCஐ ஆதரிக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. அப்படியிருக்க பாஜக ஏன் இவ்வளவு உறுதி யாக UCCஐ வலியுறுத்துகிறது? முன்பே குறிப் பிட்டது போல் அதன் நிலைப்பாடு சங் பரி வாரின் 'பண்பாட்டு தேசியவாதம்'(Cultural Nationalism) என்ற சித்தாந்தத்தால் வழி நடத் தப்படுகிறது.

இந்தியாவின் பண்டைய இடைக்கால மேலும் நவீன வரலாற்றில் எந்தக் காலத்திலும் இந்திய சமூகம் ஒரே மாதிரியான, ஒரே பண்பாட்டைக் கொண்ட அமைப்பாக இருந்த தில்லை. ஐரோப்பாவில் உருவான 'ஒரே நாடு ஒரே அடையாளம்' என்ற முறையை இந்தியாவில் அப்படியே பின்பற்ற முடியாது. ஐரோப்பாவில் 'ஒரே நாடு ஒரே அடையாளம்' என்ற முறை உருவானபோது, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் ஒரே மொழி, ஒரே இனப் பின்னணி, ஒரே மதம், ஒரே கலாச் சாரம் கொண்ட மக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். வேறுபட்டவர்கள் பெரும் பாலும் வெளிநாடுகளில் இருந்து குடி பெயர்ந்த மிகச் சிறிய எண்ணிக்கையிலான மக்கள் இருந்தனர்.

ஆனால் இந்தியா பல நூற்றாண்டுகளாக இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழும் நாடாக இருந்து வருகிறது. அவர் களின் மதங்கள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், குடும்ப மரபுகள் மேலும் சமூக நடைமுறைகள் அனைத்தும் தனித்துவமா னவை. அதேபோல் இந்தியாவில் கணிசமான

கிறித்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் உள்ளிட்ட பல மதங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்கின்றனர். சீக்கியர்கள் தங்களுக்கென தனிப்பட்ட மத அடையாளத்தையும், அதற்கேற்ற தனிநபர் சட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரி வருகின்றனர். ஆனால் அவர்களின் கோரிக்கைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஆதிவாசிகள் தங்களது சர்னா(Sarna) மதத்திற்கு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் கோரி வருகின்றனர்.

இந்தியா ஆதிவாசிகள், குர்மிகள், பழங்குடியினர், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மேலும் இயற்கை வழிபாட்டு நம்பிக்கைகளைப் பின்பற்றும் மக்களின் தாயகமாகும். இந்தப் பன்முகத்தன்மையே இந்திய சமுதாயத்தின் தனித்துவமான ஒற்றுமைக்கு பெரிய பலமாகும். எனவே எந்த ஒரு சமூகத்தையும் ‘பிறர்’(Other) என்று கருதக் கூடாது. அனைத்து சமூகங்களும் இந்தியாவின் சம உரிமையுள்ள குடிமக்களே.

அனைத்து குடிமக்களும் ஒரே பண்பாட்டு அடையாளத்தை ஏற்க வேண்டும் என்று சங் பரிவார் வலியுறுத்தினால், அதற்கான அடிப்படையைத் தெளிவாக விளக்க வேண்டும். ‘இந்துஸ்தானில் வாழ்பவர்கள் அனைவரும் இந்துக்கள்’ என்று கூறும் சங் பரிவாரின் வாதம் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பு மிகக் குறைவு. ‘ஒரே சட்டம் - ஒரே நாடு’ என்ற முழக்கத்தின் பெயரில் பெரும்பான்மையினரின் பண்பாட்டை அனைவருக்கும் பொதுவாக திணிப்பதாகவும் மக்களை மாற்ற முயற்சிப்பதாகவும் விமர்சிக்கப்படுகிறது. இத்தகைய அணுகுமுறையை அரசியல் அதிகாரத்தின் மூலம் திணிக்கப்படலாம்; ஆனால் அது நடைமுறை ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் உறுதியானது என்று ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் பகுத்தறிவுக்கும் மனித இயல்புக்கும் ஏற்றதாக இருக்கிறது. மனிதர்களுக்குத் தாங்க முடியாத சுமையை ஏற்படுத்தும் விதிமுறைகளை அது விதிப்பதில்லை. இஸ்லாமிய நம்பிக்கையின் படி, ஷரீஅத் சட்டத்தை ஏற்படுத்தியவன் அல்லாஹ். மனிதனைப் படைத்தவனாகிய அல்லாஹ், மனித இயல்பை முழுமையாக அறிந்திருப்பதால், அதனுடன் ஒத்துப்போகும் சட்டங்களையே வழங்கியுள்ளான். இந்தச் சட்டங்களின் தர்க்க ரீதியான, தத்துவ அடிப்படைகள் எப்போதும் நடுநிலையான பார்வையில் ஆய்வு செய்யப்படவில்லை. மேற்கத்திய சிந்தனையின் கண்ணோட்டத்திலேயே அனைத்தையும் மதிப்பிடுபவர்களுக்கு இஸ்லாத்தின் தனித்துவமான கொள்கைகளையும் மதிப்புகளையும் முழுமையாகப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம்.

இஸ்லாம் விவாகரத்தை விரும்பத்தகாத ஒன்றாகக் கருதுகிறது. இருப்பினும் கணவன் மனைவிக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அனைத்து உண்மையான முயற்சிகளும் தோல்வியடைந்த பிறகு, பிரிவதே சிறந்த தீர்வாக இருக்கலாம் என்பதை அது ஏற்றுக்கொள்கிறது. திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் உரிமை ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றாக வாழ முடியாத இருவரையும் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி ஒன்றாக வாழ வைப்பது, நீண்டகால மனவேதனையையும் குடும்பத்தில் இடையறாத மோதல்களையும் உருவாக்கக்கூடும். இத்தகைய சூழல் அநீதி, குழப்பம் மேலும் ஒழுக்கக்கேடுகளுக்கு வழிவகுத்து இறுதியில் குடும்ப அமைப்பையே சீர் குலைக்கக்கூடும். எனவே பெரிய தீங்கைத் தவிர்க்கச் சிறிய தீங்கை ஏற்றுக்கொள்ளும் கொள்கையின் அடிப்படையில் விவாகரத்து அனுமதிக்கப்படுகிறது.

சொத்துரிமை (பரம்பரை) சொத்து பகிர்வில் இஸ்லாமிய சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லா சூழல்களிலும் ஒரே அளவு பங்கை வழங்குவதில்லை. இதன் அடிப்படை எண் சமத்துவத்தில் (Numerical Equality) அமைந்து அல்ல, மாறாக

நியாயத்தை(Equity) அடிப்படையாகக் கொண்டது. சில துறைகளில் இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான உரிமைகளையும் கண்ணியத்தையும் வழங்கு கிறது. ஆனால் சொத்துப் பகிர்வில், உரிமை களுக்கும் பொறுப்புகளுக்கும் இடையிலான சமநிலையை அடிப்படையாகக் கொண்டு பங்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பு, வாழ்வாதாரப் பாதுகாப்பு, கண்ணியம், பெண்ணின் நலனை உறுதி செய்யும் முதன் மைப் பொறுப்பு ஆண்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே பரம்பரைச் சொத்துப் பகிர்வும் இந்தப் பொறுப்புகளுக்கு ஏற் றார் போல் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோணத்தில் பார்க்கும்போது எல்லாச் சூழல் களிலும் சமமான பங்கீடு வழங்குவது தர்க்க ரீதியாகவோ, நியாயக் கொள்கைக்கு ஏற்றதாகவோ கருதப்படுவதில்லை. உரிமை களும் சலுகைகளும் கடமைகளுக்கும் பொறுப்புகளுக்கும் தொடர்புடையதாகும்.

சில சூழ்நிலைகளில் ஒரு முஸ்லிம் பெண், ஆண் உறவினரை விட அதிகமான பரம்பரைச் சொத்தைப் பெறவும் முடியும். இறந்து போன தந்தை, தாய், சகோதரர், பிள்ளை அல்லது கணவரின் சொத்திலி ருந்து கிடைக்கும் பங்குகள், சில சந்தர்ப் பங்களில் ஓர் ஆண் பெறும் பங்கை விட அதிகமாக இருக்கலாம். அதே நேரத்தில் இஸ்லாம் வாழ்வாதாரத்திற்கான முதன் மைப் பொருளாதாரப் பொறுப்பை பெண்கள் மீது சுமத்தவில்லை. அந்தப் பொறுப்பு தந்தைக்கும் பிற ஆண் குடும்ப உறுப்பினர் களுக்கும் உரியது.

தந்தை இல்லாத பட்சத்தில் ஒரு சகோதரன் தனது சகோதரியின் கல்வி, சுகாதாரம், திருமணச் செலவுகள், பொது நலன் உள்ளிட்ட அனைத்திற்கும் சட்ட ரீதி யாகப் பொறுப்பானவராகிறார். தந்தை உயிருடன் இல்லை என்றாலோ அல்லது தனது கடமைகளை நிறைவேற்ற இயலாத நிலையிலோ இருந்தால், அந்தப் பொறுப்பை சகோதரன் ஏற்க வேண்டும். இந்தப் பொறுப்புகளின் அடிப்படையில்தான் தந்தை யின் சொத்தில் சகோதரிக்கான பங்கு நிர்ண யிக்கப்படுகிறது.

மேலும் ஒரு சகோதரி விவாகரத்து செய் யப்பட்டாலோ அல்லது கணவரால் கை விடப்பட்டாலோ, அவளுக்குப் பிள்ளைகள் இல்லையெனில் அவளது வாழ்வாதாரத்தை உறுதி செய்வதும் சகோதரனின் கடமை யாகும். எனவே பரம்பரைச் சொத்தில் முழுமையான எண் சமத்துவத்தை மட்டுமே வலியுறுத்துபவர்கள் இஸ்லாமிய சட்டத் தின் அடிப்படைத் தத்துவத்தைப் புறக்கணிக் கின்றனர்.

இன்று UCCயின் மூலம் திருமணமின்றி இணைந்து வாழும் உறவுகளுக்கு(Live in Relationships) சட்ட அங்கீகாரம் வழங்க முயல் பவர்கள், பாரம்பரிய குடும்ப அமைப்பை பலவீனப்படுத்தும் திசையில் நகர்ந்து வரு கின்றனர். ஐரோப்பா, வட அமெரிக்காவில் குடும்ப அமைப்பில் ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களால் கொடூர விளைவுகள் ஏற்பட் டுள்ளன. பல நாடுகளில் குடும்பம் என்ற சமூக நிறுவனம் கணிசமாகச் சிதைந்துள்ளது. சில நாடுகளில் குடும்ப வாழ்க்கையின் வீழ்ச்சி மிகப்பெரிய சமூக நெருக்கடியாக மாறி, பல்வேறு சமூகப் பிரச்னைகளுக்குக் காரணமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

பிறப்பு விகிதம் குறைவதும், வேலை செய்யும் வயதினரின் எண்ணிக்கை சுருங் குவதும், நீண்டகாலத்தில் தேசிய பாதுகாப் பிற்கும் பொருளாதார நிலைத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விளைவுகளாகக் கருதப்படுகின்றன. எனவே UCCயின் கீழ் லிவ் இன் (live in) உறவுகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவது எதிர்காலத்தில் ஒழுக்க, சமூக நெருக்கடிக்கு வழிவகுக்கக்கூடும். இயற்கை ஒழுங்கிற்கு முரணான செயல்கள் இறுதியில் தனிநபருக்கும் நாட்டுக்கும் தீய விளைவுகளை ஏற்படுத்தும். எனவே இந்தியா எதிர்காலத்தில் எந்தத் திசையில் பயணிக்க வேண்டும் என் பதை நாட்டின் மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.



● அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

# முராக்கபா
## – இறைவனின் கண்காணிப்பை உணரும் விழிப்பு உணர்வு

'அவர்கள் (தம் இழிசெயல்களை) மனிதர்களுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்ளலாம். ஆனால் அல்லாஹ்விடம் மறைக்க முடியாது. அவனோ அவனுடைய விருப்பத்திற்கு மாறாக அவர்கள் சதியாலோசனை செய்து கொண்டிருக்கும்போது கூட அவர்களுடன் இருக்கின்றான். மேலும் அல்லாஹ் அவர்கள் செய்கின்ற அனைத்துச் செயல்களையும் சூழ்ந்தறிந்து கொண்டிருக்கின்றான்.'(திருக்குர்ஆன் 3:108)

பலர் மனிதர்களுக்குப் பயந்து அவர்களின் கண்களிலிருந்து மறைந்து யாரும் கண்டு கொள்ளாத வண்ணம் பாவங்களில் ஈடுபடுகின்றனர். ஆயினும் மனிதர்கள் கண்டு கொள்ளாத போதிலும் இறைவன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை மறந்து விடுகின்றனர். மனிதர்களின் இரகசியங்களும் அந்தரங்க வாழ்வும் அவனுடைய அறிவிலிருந்து மறைவது இல்லை.

'மேலும் அவர்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் சூழ்ந்து அறிந்தவனாக இருக்கின்றான்'

இறைவன் எப்போதும் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற விழிப்பு உணர்வுடன் ஓர் இறை விசுவாசி வாழ வேண்டும் என்பதையே இந்த திருக்குர்ஆன் வசனம் நமக்குச் சொல்கின்றது. இந்த விழிப்பு உணர்வு 'முராக்கபா' எனப்படுகிறது.

ஒருவர் தனியாக இருந்தாலும், மக்கள் பார்க்கவில்லை என்றாலும், இரகசியமாக ஒன்றைச் செய்யும் நிலையிலும் இறைவன் என்னைப் பார்க்கிறான்; எனது உள்ளத்தை அறிகின்றான் என்ற உணர்வுடன் வாழ்வதே முராக்கபாவின் நிலையாகும்.

இறைவன் 'ரகீப்' (அனைத்தையும் நன்கு அவதானிப்பவன்) என்ற உண்மையை

**ஒருவர் தனியாக இருந்தாலும், மக்கள் பார்க்கவில்லை என்றாலும், இரகசியமாக ஒன்றைச் செய்யும் நிலையிலும் இறைவன் என்னைப் பார்க்கிறான்; எனது உள்ளத்தை அறிகின்றான் என்ற உணர்வுடன் வாழ்வதே முராக்கபாவின் நிலையாகும்.**

மனதில் கொண்டு முராக்கபா என்ற நிலையை ஒருவர் அடைந்து விடுகின்றபோது, அவர் இறைவனுக்கு மாறு செய்யத் துணிய மாட்டார்; பாவங்களைத் தவிர்ப்பார்; தனது உள்ளத்தை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனமாக இருப்பார்; நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வார்; நற்செயல்களை அதிகரிப்பார். மொத்தத்தில் அவர் நல்லடியாருக்குரிய பண்புகளைப் பெற்ற ஓர் இறை நேசராக மாறி விடுவார்.

இறைவனின் பார்வை எப்போதும் என்னுடன் இருக்கிறது என்ற உணர்வை உணர்த்தும் முராக்கபாவின் நிலை ஒருவர் தனது ஆன்மிக வாழ்வில் அடையும் மிக உயர்ந்த நிலை ஆகும். இது ஓரிரு நாள்களில் அடையக்கூடிய ஒரு நிலை அல்ல. அது நீண்ட கால முஜாஹதா(பயிற்சி, முயற்சி) ஊடாக மெதுவாக வளர்க்கப்பட வேண்டிய ஓர் உயர் நிலையாகும்.

முராக்கபாவை வளர்த்துக் கொள்ள துணை புரியும் வழிமுறைகளில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

- தனிமையில் இறைவனை நினைவு கூர்தல், திக்ரில் ஈடுபடுதல்.
- எந்த ஒன்றையும் செய்வதற்கு முன் இதனை இறைவன் ஏற்பானா? என்று சிந்தித்துப் பார்த்தல்.
- தினசரி வணக்க, வழிபாடுகளை ஈடுபாட்டுடனும் உணர்வுப் பூர்வமாகவும் நிறைவேற்றுதல்.
- திருக்குர்ஆனுடனான உள்ளார்ந்த உறவின் மூலம் உள்ளத்தை விழிப்பு உணர்வுடனும் உயிரோட்டமாகவும் வைத்துக் கொள்ளல்.
- ஒரு தவறோ அல்லது பாவமோ நடந்து விட்டால் உடனே இஸ்திஃபார் (பாவ மன்னிப்பு) கோரல்.
- தினமும் இரவு வேளையில் அன்றைய நாளில் செய்த நன்மை, தீமைகளைப் பற்றி முஹாஸபா (சுயவிசாரணை) செய்தல். முஹாஸபா உள்ளத்தை விழிப்பு நிலையில் வைத்திருக்கத் துணை புரியும்.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் நமது புற வாழ்க்கையைச் சீர் செய்து கொள்வது போலவே நமது அக வாழ்க்கையையும் சீர் செய்து கொள்வதில் கவனம் செலுத்துவோம்!


ஒரு வாட்ஸ்அப் மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

**இஸ்லாமிக் அகாடமி**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# கோபம் தவிர்!

**- பானு ஹமீத்**

***ம**னித உணர்வுகளில் கோபமும் ஒன்று. இது மற்ற உணர்வுகளை விட மிகவும் தீமையானது என்று எல்லா மறைகளும் கூறுகின்றன. கோபத்தின் அடிப் படை எதிர்பார்ப்பில் உள்ள ஏமாற்றங்கள், பயம், பொறாமை, சுயநலம் தான். ஒவ்வொருவருக்கும் எண்ணங்கள், விருப்பங்கள், ஆசைகள் இருக்கும். அதில் அவர்கள் எதிர்பார்த்த ஒன்று நிறைவேறாவிட்டால் அவர்கள் செயலில் கோபம் வெளிப்படும்.*

***'மேலும், அவர்கள் பெரும் பாவங்களையும் மானக்கேடான செயல்களையும் தவிர்த்துக் கொள்கின்றார்கள். கோபம் வந்துவிட்டால் பொறுத்துக் கொள்கிறார்கள்' (திருக்குர்ஆன் 42:37)***

இறைவன் கோபத்தினை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்னும் ரகசியத்தைக் கூறுகின்றான்.

எப்பொழுது ஒரு மனிதன் மானக்கேடான செயல்களைத் தவிர்க்கத் தொடங்கி விடுகிறானோ அங்கே அவன் அவனுடைய புலன்களை அடக்கத் தொடங்கி விட்டான் என்று அர்த்தம். அதனால் தான் அவனால் கோபத் தையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடிகிறது. எனவே முதலில் கோபத் தைக் கட்டுப்படுத்த நம்முடைய செயல்களை அழகுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது மானக்கேடான எந்த ஒரு செயலிலும் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொண்டாலேயே அந்தக் கட்டுப்பாடு புலன் அடக்கும் திறனைத் தந்துவிடும்.

கோபத்தைத் தவிர்ப்பதற்கு வீணானவற்றைச் சிந்திப்பதிலிருந்தும், வீணான வற்றைப் பேசுவதில் இருந்தும், வீணானவற்றைச் செய்வதில் இருந்தும் நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தனிமையில் அதிகமாக நாம் நம் ஏமாற்றங்களையும் மற்றவர்களின் குறைகளையும் ஆய்வு செய்வதன் மூலம் கோபம் பிறக்கிறது. எப்பொழுதும் நாம் சிறந்ததைச் சிந்திக்க மற்றவர் களிடம் உள்ள சிறந்ததை, நல்லவற்றைக் குறித்து சிந்திக்கும்போது நம்மிடம் ஒரு நிறைவுத் தன்மை ஏற்படும். அந்த நிறைவுத்தன்மை நம்மைப் பக்குவப் படுத்தும்.

பெரும்பாலும் பேசும் பொழுதே கோபத்தின் வெளிப்பாடு அதிகமாகிறது. எப்பொழுது ஏமாற்றமும் எதிர்பார்ப்பில் குறைபாடும் நடந்தால் எழுதி தகவல் பரிமாறுவது சில நேரங்களில் உகந்ததாகும். எப்பொழுது மனிதன் ஒரு

காகிதத்தை எடுத்து எழுதத் தொடங்குகின் றானோ அவனுடைய மனநிலை ஒரு நிலைப் பாட்டிற்கு வரும். அவன் எழுதி முடிக்கும் முன்பு அவனுடைய கோபம் தணிந்து விடலாம். பிறகு அதைக் கொடுக்காமல் கூட அவன் நகர்த்திச் சென்று விடலாம்.

உங்களில் எவருக்கேனும் கோபம் வரும் போது அவர் அமர்ந்து விட வேண்டும். கோபம் குறையத் தொடங்கினால் நல்லது இல்லையேல் படுத்து விடுவதே சிறப்பு என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இதயத் துடிப்பு அதிகரித்து, இரத்த அழுத்தம் அதிகமாகும் இந்த நிலையில் கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நபி(ஸல்) அவர்கள், 'நீங்கள் நின்று கொண்டு இருந்தால் அமர்ந்து விடுங்கள். அமர்ந்திருக்கும் நிலையில் கோபப்பட்டால் சிறிது தண்ணீரை அருந் துங்கள். தொழுங்கள் அல்லது படுத்து விடுங்கள். சிறிது நேரம் உங்களுக்கான ஓய் வைக் கொடுங்கள்' என்றார்கள்.

எப்பொழுது ஒரு மனிதன் கோபப்படு கிறானோ அவன் மனித நிலையில் இருந்து அதாவது பகுத்தறிவிலிருந்து சற்று கீழே சென்று விடுகிறான். பகுத்தறிவை இழந்து விட்டால் மிருகத்தின் குணம் வந்துவிடும். மிருகத்தின் குணம் முன்பின் விஷயங்களை யோசிக்க நம்மை விடாது. அதனால் பல குறைபாடுகளையும் பிரச்னைகளையும் ஏற்படுத்திவிடும். பிறகு அதை நினைத்து வருந்தும் நிலைக்குக் கொண்டு சென்று விடும்.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்(குறள் 305)

ஒருவன் தன்னைத் தானே துன்பம் வராமல் காத்துக் கொள்ள விரும் பினால் முதலில் கோபம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அவ் வாறு காக்கத் தவறினால், அந்தச் சினமே அவனை அழித்துவிடும் என் கிறார் வள்ளுவர்.

எனவே கோபம் என்பது ஒரு தீ என்று திருக்குறள் கூறுகிறது. அது அனைத்தையும் அழித்து தன்னையும் அழித்துவிடும். அப் படிப்பட்ட அந்தத் தீயில் இருந்து நாம் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

'மேலும் அவர்கள் எத்தகையோர் எனில், மானக்கேடான செயலைச் செய்து விட்டால் அல்லது (ஏதேனும் பாவங்கள் செய்து) தமக்குத்தாமே அநீதி இழைத் துக் கொண்டால், உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து, தம் பாவங் களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோரு வார்கள். (ஏனெனில்) அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னித்தருள்பவன் வேறு யார்? மேலும் தாம் செய்தவற்றில் அறிந்து கொண்டே பிடிவாதமாக இருக்கமாட்டார்கள்' (திருக்குர்ஆன் 3:135)

சில மனிதர்களுடைய கோபம் எரி மலையைப் போன்றது. அதன் அருகில் இருப்பவர்கள் அனைவருமே அந்தக் கோபத்தினால் அழிந்து விடுவார்கள். அவர்கள் தான் செய்தவற்றில் அறிந்தே பிடிவாதம் பிடிக்கக் கூடியவர்களாக இருப் பார்கள். தான் செய்தது தவறு என்றாலும் அதை சரிதான் என்ற முறையில் அவர்கள்





**தான் செய்தது தவறு என்றாலும் அதை சரிதான் என்ற முறையில் அவர்கள் பிடிவாதத்தோடு செயல்படுத்திக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் குடும்பத் தலைவர்களாகவும் நாட்டின் தலைவர்களாகவும் இருந்தால் நிச்சயமாக அந்தக் குடும்பமும் நாடும் மிகப் பெரிய சிக்கலைச் சந்திக்க நேரிடும்.**

பிடிவாதத்தோடு செயல்படுத்திக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் குடும்பத் தலைவர்களாகவும் நாட்டின் தலைவர்களாகவும் இருந்தால் நிச்சயமாக அந்தக் குடும்பமும் நாடும் மிகப்பெரிய சிக்கலைச் சந்திக்க நேரிடும்.

ஆனால் இறையச்சம் உடையவர்கள் என்றும் அறிந்தே பிடிவாதமாக தான் செய்த தவறை வைத்துக்கொள்ள மாட்டார்கள். உண்மையில் தான் தவறு செய்திருந்தால் அதை அவர்கள் சரிதான் என்று ஒருபோதும் வாதிட மாட்டார்கள். மாறாக அதற்காக மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு அதிலிருந்து அவர்கள் முழுமையாகத் தங்களை மீட்டுக் கொள்வார்கள். இது இறையச்சம் உடையவர்களுக்கே உரிய சிறந்த குணமாகும்.

‘அவர்கள் எத்தகையோர் எனில் வசதியுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள். மேலும் அவர்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும் மக்(களின் தவறு)களை மன்னித்து விடுவார்கள்..’ (திருக்குர்ஆன் 3:134)

இறைவன் கோபத்தையும், மன்னித்தலையும் இணைத்தே கூறுகின்றான். இந்தத் தன்மை இறையச்சம் கொண்ட உள்ளத்திற்கே உரியது. ஏனெனில் பலவீனமான மனித மனம் செய்துவிடத் துடிக்கும் எதிர் வினையை இறைவனிடம் முதலில் ஒப்படைத்து விடுகிறார்கள். அடுத்ததாக அவர்களின் நிலையில் உள்ள பிரச்னைகளைப் புரிந்து மன்னிக்க முயல்கிறார்கள். இதன் மூலம் இறைவன் தன்னை மன்னிப்பான் என்றே நம்பிக்கைக் கொள்கிறார்கள். இந்த மன ஆறுதல், அமைதிக்கு வழிவகுக்கிறது. இறுதியில் இதுவெல்லாம் நபிமார்கள் பட்ட துயரங்களுக்கு முன்பு ஒன்றுமில்லை என்றே ஆற்றுப் படுத்திக் கொள்கிறார்கள்.

‘எவர்கள் இறையச்சம் கொண்டு, நிலை குலையாது இருக்கின்றார்களோ அத்தகைய நல்லவர்களின் கூலியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்கி விடுவதில்லை’ (திருக் குர்ஆன் 12:90)

நல்ல செயல்களைச் செய்கின்ற இதயம் மிகவும் திடமானதாகவும், நிறைவானதாகவும் இருக்கும். அது தன்னுடைய நிலையிலிருந்து எளிதில் நிலைகுலைந்து விடுவதில்லை. எந்த நிலையிலும் நிலைகுலையாமல் இருப்பது மிகச் சிறந்த கலை. இறைவன் கொடுத்த அருள் வளங்களுக்கு நன்றி சொல்லும் நல்லடியார்கள் எப்பொழுதும் நிதான நிலையில் இருப்பார்கள். கோபம் மனித இயல்பு என்றாலும் அதைக் கட்டுப்படுத்திக் கொள்வதில்தான் மனித மாண்புகள் அடங்கியிருக்கின்றது. எனவே கோபம் தவிர்ப்போம்.

# சமரசம் புதிர் போட்டி 15

- இந்தப் பகுதியில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடையை 2026 ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் கடிதம் மூலமோ, 73050 40386 என்ற வாட்ஸ் அப் எண்ணிலோ, samarasam.article @gmail.com என்ற மின்னஞ்சல் மூலமோ அனுப்பலாம்.
- சரியான விடையை எழுதுபவர்களுக்கு ரூபாய் 200 பரிசுத் தொகையாக வழங்கப்படும்.
- ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் தேர்ந் தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படும்.
- இப்பகுதியில் கேட்கப்பட்டுள்ள கேள்விகள் குர்ஆன், ஹதீஸ், கடந்த சமரசம் இதழ்கள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.
- போட்டியில் கலந்து கொள்பவர் தங்களின் பெயர், முகவரி, அலைப்பேசி, G Pay எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

1. ‘(இறந்துபோன) அவனுடைய எலும்புகளை நம்மால் ஒன்று திரட்ட முடியாது என்று மனிதன் கருதிக் கொண்டிருக்கின்றானா? ஏன் முடியாது? நாமோ அவனுடைய விரல்களின் நுனியைக் கூட மிகத் துல்லியமாக அமைப் பதற்கு ஆற்றல் பெற்றுள்ளோம்’ இந்த வசனம் இடம் பெற்றுள்ள திருக்குர்ஆன் அத்தி யாயம்

   அ) அத் தஹ்ர் ஆ) அல் கியாமா

2. ‘உங்களில் ஒருவர் இறக்கின்ற போது அவருக் குக் காலையிலும், மாலையிலும் அவருடைய இறுதி இடம் காண்பிக்கப்படுகிறது. அவர் சுவன வாசிகளில் ஒருவராக இருப்பாரேயானால் சுவனமும், நரகவாசிகளில் ஒருவராக இருப் பாரேயானால் நரகமும் அவருக்குக் காண்பிக் கப்படுகிறது’ இந்த நபிமொழியின் அறிவிப் பாளர்

   அ) அனஸ் பின் மாலிக்(ரலி)
   ஆ) அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி)

3. முஹர்ரமாத் என்றால்..

   அ) அருவருப்பானவை ஆ) தடுக்கப்பட்டவை

4. பொழுதுபோக்குகளில் ஈடுபாடு காட்டுவது

   அ) ஸீனா ஆ) லஹ்வ்

5. ஸ்டெதெஸ்கோப்பைக் கண்டுபிடித்தவர்

   அ) ரெனே லேனக் ஆ) டேனியல் கேப்ரியல்

6. பிக்சல் என்னும் ஸ்பேஸ் டெக்னாலஜி நிறுவனத்தைத் தொடங்கி நாசா ஒப்பந்தத்தைப் பெற்று 900 கோடி முதலீட்டை ஈட்டி சாதித்த சாதனை இளைஞர்

   அ) அவாய்ஸ் அஹமது
   ஆ) சல்மான் அஹமது

7. நீட் குளறுபடிகளுக்காக ஒன்றிய கல்வி அமைச்சரை பதவி விலகக் கோரி காலவரை யற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துபவர்

   அ) அபிஜித் தீப்கே ஆ) சோனம் வாங்சுக்

8. இஸ்லாத்தைத் தழுவிய பிற்படுத்தப்பட்டவர் களுக்கு BCM சான்றிதழ் வழங்கும் அரசா ணையை ரத்து செய்த நீதிபதி

   அ) ஜி.ஆர்.சுவாமிநாதன் ஆ) சக்திவேல்

## புதிர் போட்டி பதிமூன்றுக்கான விடைகள்

1.ஆ) அல்ஹஜ் 2.ஆ) அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) 3.அ)லைடன் பல்கலை அதிகாரிகள் 4. ஆ) அபூபக்கர்(ரலி) 5. அ) கவாரிஸ்மி 6. அ) சர்தக் சித்தாந்த் 7. அ) சூர்யகாந்த் 8. ஆ) ரியாசுதீன் மன்சூரி

### சரியான விடையை எழுதியவர்கள்:

1. S. மஹசூக், காரைக்கால் 2. லட்சுமி ஹேம மாலினி, சென்னை 3. M. ராதிகா, பெங்களூர் 4. வெ.முத்துராமகிருஷ்ணன், திருச்சி 5. உஷா முத்துராமன், மதுரை 6. G. லட்சுமி, சென்னை 7. P. மகாலிங்கம், சென்னை 8. H.M. அஜீம், காரைக் கால், 9. ஜா. ஜுனைதா பேகம், பரங்கிப்பேட்டை 10. M. குர்ஷித் பர்ஹானா, திட்டச்சேரி 11.ஸ்ரீமதி, மஞ்சக்குப்பம் 12. T.A. அயானா, கடையநல்லூர் 13. ந. அனிபா, நாமக்கல் 14. G.வெங்கட ராமன், சென்னை 15. G. சாந்தி, சென்னை 16. முஹம்மது சுலைமான் இல்யாஸ், அரவங்குடி 17. ப.சையத் அஹமத், துளசேந்திரபுரம் 18. C. உமா, சென்னை 19. கண்ணன் ஸ்ரீகாந்த், சென்னை 20. M. சரஸ்வதி, சென்னை 21. H. ஹாஜா முகையதீன், குன்னூர் 22. பாலா ஆமினத், சிக்கல்

பரிசுக்குரியவராகக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

**M. ராதிகா,**
**பெங்களூர்**

சிறுகதை

# மெரினா மஹால்

**- முஹம்மது ரில்வான்**

கரீம் தலைமைச் செயலகத்தில் முக்கியமான துறையின் உயர் அதிகாரி. ஃபஜ்ர் தொழுதவுடன் அவசரமாகக் குளித்து ரெடியாகி தனது நண்பரின் மகன் திருமணத்தில் கலந்து கொள்ள இருசக்கர வாகனத்தில் கிளம்பினார்.

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள மிகப் பிரம்மாண்டமான திருமண மண்டபம் மெரினா மஹால். திருமண மண்டபத்தை அடைந்ததும் கரீம் ஓர் ஓரமாகத் தனது வாகனத்தை நிறுத்தி விட்டு மண்டபத்தின் பிரம்மாண்டத்தையும், அலங்கரித்திருக்கும் விதத்தையும் கண்டு வியந்தவாறு உள்ளே நுழைந்தவர் அங்கே யாரையும் காணாது சற்று திகைத்தவாறு நின்று கொண்டிருந்தார்.

அவருக்கு மாப்பிள்ளையின் அப்பா அஹமதை மட்டும் தான் தெரியும். தூரமாக நின்று கொண்டிருந்த மண்டபத்தின் பணியாளரிடம் ‘ஏப்பா யாரையுமே காணோம். 10 மணிக்கு நிக்காஹ்னு பத்திரிகையில் போட்டிருந்ததே..’ என்று கேட்ட கரீமிடம், ‘மாப்பிள்ளையை ஊர்வலமாக அழைத்து வரச் சென்றுள்ளார்கள்’ என்றார் அந்தப் பணியாளர்.

அங்கிருந்த சேரில் அமர்ந்த கரீம் மனதில் பழைய நினைவுகள் ஓடின. அஹமது சுமாராகப் படிக்கக் கூடிய மாணவன். நெல்லை அரசு மேல்நிலைப்பள்ளியில் கரீம் 5ஆம் வகுப்பு படிக்கும் போது அஹமதும் அவரோடு வந்து சேர்ந்தார். கரீம் வகுப்பில் முதல் மாணவனாக வரக் கூடியவர். இது தெரிந்து அஹமது கரீம் பக்கத்தில் அமர்ந்து கொண்டார். அதிலிருந்து இருவரும் நெருங்கிய நண்பர் களானார்கள்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்திலிருந்து அஹமது வந்திருக்கிறார் என்று தெரிந்தவுடன் அஹமதின் மீது இயல்பாகவே கரீமுக்கு இரக்கம் ஏற்பட்டது. காலம் உருண் டோடியது. இருவரும் +2 முடித்து நல்ல மதிப்பெண்கள்

எடுத்து கரீம் உயர் கல்விக்குச் சென்று விட்டார். சுமாரான மதிப்பெண்கள் எடுத்த அஹமது தனது தகப்பனாரின் பெட்டிக் கடையை கவனிக்கத் தொடங்கினார்.

கொஞ்ச காலம் சென்றபின் அஹமது துபாயில் வேலை கிடைத்து அங்கு சென்று விட்டார். துபாயில் பெரிய மாலில் கிளீனிங் வேலையில் சேர்ந்த அஹமது படிப்படியாக உயர்ந்து அது போன்ற ஒரு மாலுக்குச் சொந்தக்காரர் ஆகும் அளவுக்குப் பெரும் பணக்காரர் ஆகி விட்டார். அது மட்டுமல்ல சென்னையிலும் நிறைய சொத்துகளை வாங்கிக் குவித்து விட்டார்.

அதே நேரத்தில் கல்லூரி படிப்பை முடித்து தமிழ்நாடு அரசுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற கரீம் சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் பதவியில் பணியில் சேர்ந்தார். ஒரு நாள் பணியில் இருக்கும் போது அவரது மொபைல் சிணுங்கியது. ஏதோ ஒரு நம்பர்.

‘ஹலோ யார் பேசுறது?’

‘டேய் கரீம் நான்தான் அஹமது பேசுறேன். ஒன் கிளாஸ் மேட்’

‘ஓ..! அஹமது எப்படி இருக்க? இப்ப எங்க இருக்க? என்ன செய்ற.?’

‘நான் துபாய் வேலையை விட்டுட்டேன். இப்ப சென்னையில் செட்டில் ஆகிட்டேன். எனக்கு ஒரு உதவி செய்யணும்.’

‘என்ன.. சொல்லு!’

‘சென்னை ஓஎம்ஆர் ரோட்டில் ஒரு நிலம் விற்பனைக்கு வருது. அதை நான் வாங்கலாம்னு நினைக்கிறேன். ஆனால் அதில் ஒரு சிக்கல். அந்த நிலத்துக்கு அரசாங்கத்தோட அப்ரூவல் இன்னும் வாங்கலையாம். அதை விசாரிச்சப்ப அது நீ வேலை பாக்குற துறையின் கீழ்தான் வருதாம். அதான் நான் உன்னைப் பார்க்க நேர்ல வரலாம்னு நினைக்கிறேன்..’

‘சரி வா..!’ என்று கரீம் தன்னால் இயன்ற உதவியைச் செய்தார். அதனால் உருவானதுதான் இந்த பிரம்மாண்ட திருமண மண்டபம் மெரினா மஹால்.




அதில் வைத்துதான் அஹமது மகனுக்குத் திருமணம் நடைபெற இருக்கிறது என்ற சிந்தனையில் இருந்த கரீமை வெடிச் சத்தம், பேண்ட் வாத்திய முழக்கம் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. சற்று எழுந்து வெளியே வரும் மாப்பிள்ளை ஊர்வலத்தையும், அதன் ஆரவாரத்தையும் கண்டு வியப்பில் ஆழ்ந்தார். சரவெடிகள், மேளதாளங்கள், யானை, குதிரை ஊர்வலம்

**அவ்வளவு மீதமான உணவுகள் கொட்டப்பட்டுக் கிடந்தன. அதன் மதிப்பே இலட்சக்கணக்கில் என்ற யோசனையில் இருந்த கரீமின் கண்களில் அந்தக் காட்சி படாமல் இல்லை.**

அப்பப்பா..! ஒரு வழியாக மாப்பிள்ளை வந்து சேர்ந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் திமுதிமுவென மண்டபத்திற்குள் நுழைந்தனர். மண்டபம் நிரம்பியது.

கரீம் கூட்டத்தில் அஹமதைத் தேடினார். கோட், சூட் என்று அமர்க்களமாகத் திரிந்து கொண்டிருந்த அஹமது கரீம் அமர்ந்திருந்த திசையைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

ஜூஸ், டீ, காபி என விதவிதமாகப் பரிமாறப் பட்டது. நிக்காஹ் முடிந்து அனைவரும் சாப்பாடு நடக்கும் இடத்திற்கு முண்டி அடித்துக் கொண்டு சென்றனர். பிரியாணி, நெய்ச்சோறு, சைவம், விதவிதமான உணவுகள் பரிமாறப்பட்டன.

கரீம் எப்படியாவது அஹமதைச் சந்தித்து தனது வருகையைப் பதிவிட முயன்று தோற்றுப் போனார். இலை போடப்பட்டு, இலை முழுவதும் உணவு பரப்பப்பட்டு இலையே தெரியாத அளவுக்கு உணவு பரிமாறப்பட்டது. வெளியே வந்தால் அங்கே உள்ளே விடுபட்ட ஜிகர்தண்டா, ஐஸ்கிரீம், பாப்கார்ன் என பரிமாறப்பட்டுக் கொண்டு இருந்தது. உணவு உண்ணாமல் கரீம் வெளியேறினார்.

அங்கிருந்து நகர்ந்த கரீம் எச்சில் இலை போடும் இடத்தைப் பார்த்து மனம் கலங்கினார். அவ்வளவு மீதமான உணவுகள் கொட்டப்பட்டுக் கிடந்தன. அதன் மதிப்பே இலட்சக்கணக்கில் என்ற யோசனையில் இருந்த கரீமின் கண்களில் அந்தக் காட்சி படாமல் இல்லை.

கிழிந்த சட்டை, அழுக்கு லுங்கியுடன் ‘அய்யா கொஞ்சம் சாப்பாடு போடுங்கய்யா’ என்ற முதியவரை, ‘போயா... களரி இன்னும் முடியல... அதுக்குள்ள அய்யான்னு வந்துட்டார்..’ என்று விரட்டிக் கொண்டிருந்தார் ஒருவர்.

‘உண்ணுங்கள், பருகுங்கள் விரயம் செய்யாதீர்கள்’ என்ற திருமறை வசனம் மனதில் ஓட, தன்னுடைய பர்ஸிலிருந்து 200 ரூபாயை எடுத்து அந்த நபரிடம் கொடுத்து, வெளியே ஹோட்டலில் சாப்பிடுங்கள் என்று கூறிவிட்டு தான் மணமகனுக்குப் பரிசளிக்கக் கொண்டு வந்த குத்பாப் பேருரைகள் என்ற நூலை அங்கு மொய்ப் பணம் வசூலிக்கும் நபரிடம் கொடுத்து விட்டு அவர் கொடுத்த தாம்பூலக் கவரை வாங்காமலேயே அந்த இடத்தை விட்டு வெளியேறினார் கரீம்.

• A.S. முஹம்மது ரசான்

## திருக்குர்ஆனும் அறிவியல் அற்புதங்களும்

# கருவியல் ஆராய்ச்சியின் அதிசயம்

**புனித திருக்குர்ஆன் மனித குலத்திற்கு இறைவனால் அருளப்பட்ட இறுதி வேதமாகும். இது வெறும் மதச் சடங்குகளுக்கான வழிகாட்டி மட்டுமல்ல; மாறாக பிரபஞ்சம், இயற்கை, மனிதனின் படைப்பு, வரலாறு குறித்து வியத்தகு உண்மைகளை முன்வைக்கும் ஒரு முழுமையான வாழ்வியல் நூலாகும்.**

ஏறத்தாழ 1450 ஆண்டுகளுக்கு முன்பு நவீன அறிவியல் கருவிகளும் தொழில்நுட்பங்களும் இல்லாத அந்தக் காலகட்டத்தில் படிக்கவோ எழுதவோ அறிந்திடாத நபி முஹம்மது(ஸல்) அவர்களுக்கு இந்த வேதம் அருளப்பட்டது. எனினும் இன்று நவீன விஞ்ஞானிகள் தங்களின் மேம்பட்ட ஆராய்ச்சிகள், கோடிக்கணக்கான நிதிச் செலவுகள் மூலம் கண்டறியும் உண்மைகள் பலவற்றை திருக்குர்ஆன் ஏற்கனவே அறிவித்திருப்பது உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இது தான் இப்புனித வேதம் இறைவனிடமிருந்து வந்தது என்பதற்கான மிக உறுதியான அத்தாட்சிகளாகும்.

திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள பல அறிவியல் அற்புதங்களில் மனிதக் கருவின் உருவாக்க நிலைகள் பற்றிய விளக்கம் தனித்துவமானதும் உலகப்புகழ்பெற்ற மருத்துவ விஞ்ஞானிகளையும் ஈர்க்கச் செய்ததுமான தாகும். திருக்குர்ஆனின் 23ஆவது அத்தியாயமான ஸூரத்துல் முஃமினூனின் 12 முதல் 14 வரையிலான வசனங்களில் மனிதனின் படைப்பு பருவங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன.

‘மனிதனை நாம் களிமண்ணின் சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் (செலுத்தப்பட்ட) விந்தாக ஆக்கினோம். பிறகு அந்த விந்தினை இரத்தக் கட்டியின் வடிவத்தில் அமைத்தோம். பின்னர் அந்த இரத்தக் கட்டியை சதைக்கட்டியாய் ஆக்கினோம். பிறகு, அச்சதைக் கட்டியை எலும்புகளாய் ஆக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளைச் சதையால் போர்த்தினோம். பிறகு அதனை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச் செய்தோம். பெரும் அருட்பேறுகள் உடையவன் ஆவான் அல்லாஹ், படைப்பாளர்களிலெல்லாம் மிக அழகான படைப்பாளன்’

இந்த வசனங்கள் மனிதக் கருவின் வளர்ச்சியை மிகத் துல்லியமான ஒரு வரிசையில் விவரிக்கின்றன. நவீன அறிவியல் இந்த வரிசையை முற்றிலும் உறுதிப்படுத்தி உள்ளது.

1980களில் கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகத்தின் உடற்கூறியல், கருவியல் துறையின் உலகப் புகழ்பெற்ற பேராசிரியரான டாக்டர் கீத் எல்.மூர் இந்த வசனங்களை ஆராயும் வாய்ப்பு பெற்றார். அவரது பதில் உலகையே திகைக்க வைத்தது. முதலாவதாக, ‘அலக்’ எனும் அரபிச் சொல்லுக்கு அட்டை என்று பொருள். தாயின் கருப்பைச் சுவற்றில் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சும் கரு, நுண்ணோக்கியில் பார்க்கும் போது அதன் வடிவம் அட்டையின் வடிவத்தைப் போன்றே உள்ளது. இது கருவுற்று 15 முதல் 24 நாள்களுக்குள் ஏற்படும் நிலையாகும்.


இரண்டாவதாக, ‘முத்கா’ எனும் சொல்லுக்கு ‘பற்களால் மெல்லப்பட்ட இறைச்சித் துண்டு’ என்று பொருள். இந்தக் காலக்கட்டத்தில் கருவில் உருவாகும் சோமைட்டுகள்

எனப்படும் முதுகெலும்பு முன்னோடி செல்கள், மெல்லப்பட்ட இறைச்சியில் உள்ள பல் வரிப்புடன் ஒத்து காட்சியளிக்கின்றன. மூன்றாவதாக குர்ஆன் கூறும் வரிசைப்படி முதலில் எலும்புகளின் அமைப்பு உருவாகிறது. பின்னரே அவற்றிற்கு சதை போர்த்தப்படுகிறது. இது நவீன முப்பரிமாண ஸ்கேனிங் தொழில்நுட்பத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



கீத் மூர்

இந்த உண்மைகளை உணர்ந்த பேராசிரியர் கீத் மூர், 'இந்தத் தகவல்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்தே வந்திருக்க வேண்டும். 1400 ஆண்டுகளுக்கு முன் எவ்வித அறிவியல் கருவியுமின்றி, ஒரு மனிதரால் இத்தகைய துல்லியமான தகவல்களை வழங்க முடியாது' என்று தெரிவித்தார். அவர் தமது பாடநூலான 'தி டெவலப்பிங் ஹ்யூமன்' எனும் புத்தகத்தின் புதிய பதிப்பில் இந்த குர்ஆனியத் தகவல்களை இணைத்துக் கொண்டார். இது இஸ்லாமிய உலகில் மட்டுமின்றி மேற்கத்திய அறிவியல் வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.




திருக்குர்ஆன் வெறும் அறிவியல் நூல் அல்ல; அது அல்லாஹ்வின் அற்புதங்களைக் காட்டும் அடையாளங்களின் நூலாகும். பிரபஞ்சத்தின் தொடர் விரிவாக்கம், கடலின் ஆழத்தில் நிலவும் இருண்ட அடுக்குகள், மலைகளின் இயக்கவியல், வானவியல் கோள்களின் சுற்றுப் பாதை, மருத்துவத் துறையில் விந்துப் பாய்ச்சல், பாலூட்டி சுரப்பிகள் பற்றிய தகவல்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான உண்மைகள் இன்று நவீன அறிவியலால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக கடல், ஆறுகள் சந்திக்கும் இடத்தில் அவற்றின் நீர் கலக்காமல் தனித்தனியாக ஓடுவது குறித்த குர்ஆனின் குறிப்பு கடலியல் நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து இந்த வேதம் மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்பதை நிறுவுகின்றன.

நவீன தொழில்நுட்பமும் விஞ்ஞான முன்னேற்றங்களும் எவ்வளவு முன்னேறினாலும் அவை அனைத்தையும் திருக்குர்ஆன் 14 நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒருங்கிணைத்து வழங்கியுள்ளது. குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சி மேம்பட்டுள்ள இன்று பிரபஞ்சத்தின் விரிவாக்கம், ஒவ்வொரு விண்கோளும் தனித்தனி சுற்றுப்பாதையில் இயங்குவது பற்றிய குர்ஆனின் கூற்றுகள் மிகவும் வியத்தகு செய்திகளாக உள்ளன. இவை ஒவ்வொன்றும் இந்த வேதத்தின் இறைத்தன்மைக்கு புத்தம் புதிய சாட்சிகளாக அமைந்து வருகின்றன. இது ஐயத்திற்கு இடமின்றி இறைவனின் வேதம் என்பதற்கு போதுமான சான்றாகும்.

நாம் வாழும் இந்த 21ஆம் நூற்றாண்டில், விஞ்ஞான ஆராய்ச்சிகள் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கும் நிலையில் திருக்குர்ஆன் வழங்கும் அறிவியல் உண்மைகளும் இன்னும் புதிது புதிதாக வெளிப்படக்கூடும். ஒவ்வொரு புதிய அறிவியல் கண்டுபிடிப்பும் திருக்குர்ஆனின் உண்மைத்தன்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது. இவை அனைத்தும் இஸ்லாமிய நம்பிக்கைக்கு புத்துயிர் அளிப்பதோடு உலக மக்களுக்கு இறைவனின் பேராற்றலை உணர்த்துகின்றன.

அறிவியலும் மதமும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; மாறாக இயற்கை, பிரபஞ்சம் குறித்த இரண்டு வேறுபட்ட நோக்குகளே இவை. திருக்குர்ஆனின் இந்த அற்புதமான உண்மைகளை மக்கள் உணர்ந்து, சிந்தித்து, இயற்கையையும் இறைவனையும் அறிந்து கொள்ளும் பயணத்தில் இணைவது வாழ்வின் நோக்கத்திற்கான முதற்படியாகும். இந்த உண்மைகள் மனிதகுலம் முழுவதற்குமான பொதுவான பாடமாகவும், அமைதியான சமூகத்தைக் கட்டமைப்பதற்கான அடிப்படையாகவும் அமையக் கூடும்.

• ஜரினா ஜமால்

# அக்கரைப் பச்சை 42

திருநெல்வேலியில் இறங்காமல் மதுரைக்கு நேரடியாகச் செல்லும் கண்ணன் அண்ட் கண்ணன் பஸ்ஸில் சாலிஹா தம்பியுடன் புறப்பட்டாள். பலவிதமான குழப்பமான மனநிலைக்குத் தள்ளப்பட்டாள். மடி நிறைய பணமும், மனம் நிறைய கனமும் இருந்தது.

ஊரிலேயே மதரஸா ஆரம்பிக்கலாம். ஆனால் அங்கும் பல மதரஸாக்கள் நடந்து கொண்டிருக்கிறது. என்ன கல்வி கற்று ஆலிம்கள் பெருகி என்ன செய்ய? ஃபித்னாக்கள் குறைய வேண்டாமா? குழப்பங்களும், குழப்பவாதிகளும் அதிகரிக்கிறதே!

தூரத்து உறவுப் பெண் கூறினாள்: ‘ஆறாந் தெருக்காரனுங்க பெட்டிசன் போட்டதுல சாலின் (ஸ்டாலின்) கையெழுத்து போட்டு கந்தூரி நடக்க சொல்லிட்டாராம்லா, அதுக்கு முன்னால அவங்கவங்க வீடுகள்ல, பல குடும்பங்கள்ல ஒவ்வொரு கெடுதலா நடந்துச்சாம். இப்பதான் நிம்மதியா இருக்காங்களாம் லா!’

‘நம்ம ஊருல சினிமா கொட்டாய் இல்ல, சாராயக்கடை இல்ல, வட்டிக் கடை இல்ல, இது ஒன்னு தானமா ஒரு வேடிக்கை பொழுதுபோக்கு’

‘அப்போ என்னண்டு சாராயம் ஊருக்குள்ள வந்துச்சு? குடிச்சிட்டு தானே ஆடி இருக்கானுங்க?’

‘இது இணைவைப்புன்னு எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் புரியாதவர்களுக்கு என்ன செய்ய?’

‘கட்டளத்தெருக்குத் தான் எதுவுமே வரலையே. நீ ஏன் மாஞ்சி மாஞ்சி பேசுற’

‘இங்க உள்ளவங்க கட்டளத் தெருக்கு எந்த பஞ்சாவும், கூடும் வரக்கூடாதுன்னு சொன்னதால இங்கன வரல.’

‘போன வருசம் ஒத்தருக்கும் சொல்லாம கடைசி நேரத்தில் வெளிக்கொண்டு வந்தாங்க. இந்த வருசம் குடி குடிச்சி, வெடி வெடிச்சு பெருசா செய்றாங்க’

‘கட்டளத் தெருக்கு வரலைன்னா தூரத்துல எரிகிற நெருப்பு அப்படியே நிக்குமா? கொஞ்சம் கொஞ்சமா பரவி வர்ற மாதிரி இவங்க ஆட்டம் நம்ம தெருக்கு வர எவ்வளவு காலம் ஆகும்’

பெண்கள் பலவாறாகப் பேசினார்கள். ஊர்ப் பெண்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? நகரத்து பெண்கள் பேச மாட்டார்கள் என்றால் நம்ம புறத்துப் பெண்கள் நன்றாகப் பேசுவார்கள். நியாயத்தையும் பேசுவார்கள்.

வரும்போது சாச்சிமாவுடன் சல்மாவின் நினைவுகளுடன் வந்தாள். இப்போது தம்பி வேறு சீட்டிலும், சாலிஹா வேறு சீட்டிலும் உட்கார்ந்திருந்தார்கள். மேலும் ஊரில் நடந்த விஷயங்களும், மக்கள் பேசிய பேச்சுகளும் மனதில் அலை மோதியது .

அதிசய பூமி நெல்லைச் சீமை என்பார்கள். மேற்குத் தொடர்ச்சி மலை தந்த நதிகளில் தாமிரபரணி வற்றாநதி. குற்றாலம் போன்ற மலையருவிகள் இருந்தாலும் நெல்லியாறும் அதில் ஒன்று. இந்த ஆறுகளின் கருணையினால் பச்சைப் பட்டாடை போர்த்தப்பட்டது போல் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமையாக உள்ளது.

இந்தப் பசுமை ஒருபுறம் இருக்க இதை எல்லாம் விட அதிசயம் என்று இந்த பஞ்சாக் கூடு தீச்சட்டிகள் தூக்குவது ஒரு ஊரையே அழித்து விடும் அல்லது தட்டுப்பாடு, பஞ்சம், நோய் என்று இறைவன் கொடுத் தால் மக்கள் என்ன செய்வார்கள்.

இதில் ஒரு பெண் பெருமையாகப் பேசினாள்.

‘போன வருச(ம்) படுவளம்னு கேள்விப் பட்டதும் நாங்க சென்னையிலிருந்து ஓடோடி வந்துட்டோம். 1990ல எல்லாம் நவாப் கட ஒன்னுதான். காராச்சேவு, இனிப்புச் சேவு, மிச்சர், லட்டு, பூந்தி, சூடான அல்வா. புள்ளைங்க கூட்டம் அலைமோதும். அல்வா என்னா ருசியா இருக்கும். அந்த மாதிரி அல்வா இப்போ எங்கயும் இல்ல’

‘இப்போ நவாப் கடை இல்லியா?’

‘இப்போ நவாபும் இல்ல நவாபு கடையும் இல்ல’

‘காலத்துக்கு ஏத்த கோலம் என்பது போல் இப்ப பஞ்சு மிட்டாய், பாணி பூரி, சவர்மா, ஸ்ப்ரிங் பொட்டோட்டா, பர்கர், பாவ் பாஜி, மோமோஸ் கடைங்க அதிக மாயிட்டு’

‘ளா மெஹரு! நம்ம செய்ற கொளக் கட்டையை தாம்லா மோமோஸ்ங்றாங்க’

‘அன்னைக்கு ராட்டு ஊஞ்சா, குதிரை ஊஞ்சா இருக்கும். இப்போ டிராம்பொலி னாம், டிராக் டிரெய்னாம். என்னவோ போ! நம்ம மக்க குட்டிங்கதான் குதி குதின்னு அதுல கெடந்து குதிக்குதுங்க’

‘என் பேத்தி ‘உம்மம்மா, படுவளம்னா என்ன? நானும் பிரண்டுகளுடன் போய் கடைகள வேடிக்கை பாத்து வரவான்னு’ எட்டாம் வகுப்பு படிக்கும் புள்ள கேட் டுச்சி. அங்க போனா உம்மம்மா உன்ட்ட பேச மாட்டேன். களக்காட்டில் உன் வாப்பாட கடையில இல்லாத ஜாமான்களா என்று ஏசிட்டேன். போகலியே. இங்கதா இருந்தா’

எந்த ஊரிலாவது இப்படி நடக்கிறதா? யாராவது வந்து பேச மாட்டார்களா? என்று மனம் ஏங்கியது.

‘வண்டி ஐந்து நிமிடம் நிற்கும். டீ காபி குடிக்க இறங்கலாம்’ ஓட்டுனரின் குரலில் சட்டென்று நினைவுகளைக் கலைத்து நிமிர்ந்து அமர்ந்தாள். தன்னருகே இடம் காலியானது அறியாமல் ஊர் நினைவில் உட்கார்ந்திருந்ததை நினைத்து வெட்கி னாள்.

தம்பி இரண்டு பேப்பர் டம்ளரில் டீ கொண்டு வந்து கொடுத்தான்.

‘என் பக்கத்தில் வந்து உட்காருடா.!’

‘இதோ பேக்குகளைத் தூக்கி வரு கிறேன்’




‘அக்கா! ரெஸ்ட் ரூம் போகணுமா?’

‘ஐயோ வேண்டாம்பா. யூரின் இன் பெக்சன் ஆகிவிடும். வீட்டுக்கு போய் பார்த்துக்கலாம்’

‘வீட்ல என்னக்கா பிரச்னை ?’

‘ஒன்னுமில்லையே’

‘அம்மாவிடம் அண்ணன் ஏதோ சத்தமா பேசிக் கொண்டிருந்தார் அதான் கேட்டேன்’

‘அதெல்லாம் ஒன்னுமில்லடா!’

‘அக்கா நான் ஒன்னு சொல்றேன். நம்ம வாழ்க்கையில் நமக்கு ஒன்னு நல்லதுன்னா அதைத் தட்டிக் கழிக்கக் கூடாது. உங்க வாழ்க்கை உங்க உரிமை!’

‘என்னடா பெரிய மனுஷன் மாதிரி பேசுற?’

‘இன்னும் நீங்க என்ன சின்னப் பையன் மாதிரியே நினைச்சுகிட்டு இருக்கீங்க அக்கா! என் பிள்ளைகள் என்னை விட பெரிய மனுஷங்களாக பேசுதுங்க.’

சாலிஹா நினைத்தாள். எனக்கும் காலாகாலத்தில் இறைவன் குழந்தைச் செல்வத்தைக் கொடுத்திருந்தால் இவனுடைய பிள்ளைகளை விட என் பிள்ளைகள் மிகவும் பெரிதாக இருப்பார்கள்.

‘ஒன்னும் இல்லடா, எனக்கு வயது 50 ஆகப் போகுது. ஒரு மதரஸா பாடம் கற்றுக்கொடுக்க, இல்லைனா ஆதரவில்லாத பெண்கள் இல்லம் அமைத்து அவர்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுக்க ஆசையாக உள்ளது’

அக்கா அதற்கு கையில் கோடி ரூபா யாவது இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பல தனவந்தர்களிடம் பணம் கேட்டு பிச்சை எடுக்க வேண்டும்.

‘நாம் அகலக்கால் வைக்காமல் இருப்பதைக் கொண்டு சிறியதாக ஆரம்பிக்கலாமே. நீ இருக்க..! அக்கா மகன்கள் ரெண்டு பேரும் இருக்காங்க உடல் உழைப்பை உதவியாக எனக்குத் தர மாட்டீங்களா?’

‘எல்லாம் பேசுவதற்கு ஈசியாக இருக்கும் அக்கா.. ஆனால் செயல்படுத்தும் போது அவரவர் வேலையே பெரிதாக ஆகிவிடும்’

வீட்டிற்குப் போய் நாம் பேசிக் கொள்ளலாம். அக்கா மகன்களுக்கு மெசேஜ் போட்டாள். ‘நான் மதுரை வந்து கொண்டிருக்கின்றேன். மாலையில் வீட்டில் வந்து என்னைச் சந்திக்கவும். மதரஸா விஷயமாக பேச வேண்டும்.’

- தொடரும்..

HIJAZ
LEATHERS PVT. LTD.,
Tanners & Exporters of
Finished Leathers & Fashion Gloves

HEAD OFFICE :
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

TANNERY :
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

GLOVE FACTORY :
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com



# கண்மணியே கண்ணுறங்கு!

– கவிஞர் **காசீம்**, கடையநல்லூர்

கண்ணுறங்கு! கண்ணுறங்கு!
என் கண்ணான கண்மணியே கண்ணுறங்கு!
கண் விழித்து செயலியை
கையிலெடுக்காதே கண்மணியே!

கண்கெட்டுப் போகுமடி கண்மணியே
அன்னை மடியமர்ந்து அமுதுண்ணும் கண்மணியே!
அவள் பாடும் பாட்டைக் கேளடி கண்மணியே

ஊருக்கு நாட்டாமை உன் அப்பா
ஏழைகளுக்கு உதவுவதிலே சீதக்காதி
பேரிருக்கு பெருமையிருக்கு
பெருஞ்சனங்களெல்லாம் கையெடுக்கும்

மகராசன் பெற்ற கண்மணியே!
மண்ணாளும் மகதூனியே கண்ணுறங்கு!
தங்கத் தாம்பலத்திலே பொன்நெல் பரப்பியே
அகரம் எழுதுவாய் அவர் மடியமர்ந்து கண்மணியே!


கண்மணியே! கண்மணியே!
காலத்துக்கு ஏற்ற கல்வி கற்று
கலெக்டராக வேண்டும் கண்மணியே!

அப்பாவுக்கு மகளானாலும்
அரசாளப் பிறந்தவளே கண்மணியே!
அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்குன்னு
ஊரார் மெச்ச வேணும் கண்மணியே!

பட்டிதொட்டி மக்களுக்கெல்லாம்
மார்க்கக் கல்வி மதரசா கட்டித் தந்து
ஒழுக்கமுடன் வாழ்க்கைக் கல்வி
பெறச் செய் கண்மணியே!

ஏழை மக்களெல்லாம் உயர்கல்வி பெற்று
உயரச் செய்வாய் கண்மணியே!
காலமிது! காலமிது! கண் வளரும் காலமிது!
கண்ணுறங்கு! கண்ணுறங்கு!
கண்மணியே கண்ணுறங்கு!

# வண்ணம் தீட்டுங்கள்!



## சித்திரம் பேசுது..!



Y. மாஹிரா, 4ஆம் வகுப்பு,
சாந்திநிகேதன் இந்தியன் பள்ளி
தோஹா, கத்தார்



S.K. முகம்மது தமீம், 6 ஆம் வகுப்பு,
இஸ்லாமியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
கரும்புக்கடை, கோவை

***அன்புச் செல்லங்களே..!*** இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம். வாட்ஸ்அப்பில் அனுப்ப: **7305040386**

அனுப்ப வேண்டிய முகவரி : *சிறார் உலகம், சமரசம் மாதமிருமுறை இதழ்*
*IFT லேன், 138 பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600012*

# உங்கள் பிள்ளைகளோடு பேசத் தயங்குவது ஏன்?



தலைநகர் தில்லியில் ஜந்தர் மந்தர் போராட்டக்களத்தில் நீட் தேர்வு குளறுபடிகளுக்கு எதிராகவும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரியும் மாணவர்களின் உரிமைகளுக்காகவும் கால வரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மாணவப் போராளிகளையும் சோனம் வாங்சுக்கையும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்தியத் தலைவர்கள் சந்தித்து தங்களின் ஆதரவைத் தெரிவித்தார்கள். இந்தச் சந்திப்பின் போது ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் உயர்நிலைக் குழுவில் எஞ்சினியர் முஹம்மத் சலீம், மலிக் முஅதசிம் கான், ஷஃபி மதனி, சையத் அஹ்மத் அலீ, லயிக் அஹ்மத் கான் ஆகியோர் இருந்தார்கள்.

ஜந்தர் மந்தர் போராட்டக் களத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் அகில இந்திய துணைத்தலைவர் எஞ்சினியர் முஹம்மத் சலீம் 2026 ஜூலை 16ஆம் நாள் போராளிகள் மத்தியில் உரையாற்றினார்.

‘அருமை மகன்களே! மகள்களே! சோனம் வான்சூக் அவர்களே! அபிஜித் திப்கே அவர்களே! உங்கள் அனைவருடைய தீரத்துக்கும் வீரத்துக்கும் உணர்வுக்கும் ஸலாம்!

நீங்கள் இந்த நாட்டின் ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றீர்கள். இன்றுவரை நம்முடைய நாட்டில் எத்தனையோ கொடுமைகள், அநீதிகள், அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. நாடு மௌனமாக இருந்தது. சமூகம் மௌனத்தில் உறைந்து கிடந்தது. எவருமே வாய் திறந்து எதுவும் சொல்ல இயலாத நிலை. நீங்கள் தைரியத்தோடும் தீரத்தோடும் அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பி இருக்கின்றீர்கள்.

இப்போது மாற்றத்தின் விதை இங்கே ஊன்றப்பட்டு விட்டது. மாற்றம் நிச்சயமாக மலர்ந்தே தீரும் என்பதில் எங்களுக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. அரசு தன்னுடைய அணுகுமுறையை, கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லை எனில் மக்கள் அவர்களை மாற்றி விடுவார்கள்.



அநீதிக்கு எதிராக எழும்புகின்ற குரல்களை நீண்ட காலம் அமுக்கி வைத்திருக்க முடியாது. இந்தக் களத்தில் அநீதிக்கு எதிரான, மாற்றத்துக்கான போராட்டம் தொடங்கிவிட்டது. ஆட்சியில் இருப்பவர்களின் ஆன்மா விழித்தெழுந்து விடும். அவர்கள் இந்தப் போராளிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆட்சியாளர்கள் தங்களின் நண்பர்களோடு, தங்களின் பிள்ளைகளோடு பேசுவதற்குத் தயங்குவதேன்? தன்னுடைய பிள்ளைகளோடு பேசுவதற்கு யார்தான் பயப்படுவார்? நீங்கள் இறங்கி வந்து போராளிகளோடு பேசவில்லை எனில், விவகாரம் முற்றி விடும். பிரச்னை எல்லை மீறிப் போய்விடும்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன் வரவில்லை எனில், பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தகுதி பெற்றவர்களாக நீடிக்க மாட்டீர்கள்.

மாணவ இளைஞர்களே..! உங்களுடன் நாங்கள் இருக்கிறோம். வெல்வோம்! **- TAL**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed by : S. Rajan at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

**ST COURIER®**
**The People's Choice**

**ISO 9001 : 2015**

# WE NOW ACCEPT
# TO PAY & COD
# BOOKINGS

## "A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of
WCA INTER GLOBAL

**044-61266666**

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

Posted at Egmore RMS - Patrika Channel
SAMARASAM Tamil Fortnightly 01 - 15 August 2026 Registered With the RNI No : 33723/81
Postal Regn. No. TN/CCN/428/2024-2026 WPP No : TN/PMG(CCR)/WPP 450/2024-2026
(Publication Date 1st & 16th of Every Month) Posted on 1-3 & 16-18 of Every Month.

Anywhere - Anytime

• Domestic
• International
• Cargo




Send your documents & Parcels through

THE PROFESSIONAL COURIERS

Pro premium a professional service › DOMESTIC › INTERNATIONAL › CARGO

BUSINESS ENQUIRY :
No.32, Thiru-Vi-Ka Salai,
Royapettah, Chennai-600014.
Phone: 044-4555 3222
E-Mail: maaro-mkt@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com

SERVICE ENQUIRY :
No.17, Cathedral Garden Road,
Nungambakkam, Chennai-600034.
Phone: 044-6620 2020
E-Mail: maaro@tpcglobe.co.in
Website: www.tpcglobe.com


If undelivered, please return to : Samarasam, 138, Perambur High Road, Chennai - 600 012.